# தெரிதல்

17

பங்குனி - சித்திரை 2016

20/=

## சிறந்த முன்னுதாரணம்!

**செ.கதிர்காமநாதன் படைப்புகள்** என்னும் 552 +xix பக்கங்கள்கொண்ட பெரு நூலை, கரவெட்டி பிரதேசச் செயலகம் வெளியிட்டுள்ளது.


1972 இல் காலமான செ.கதிர் காமநாதனின் இரண்டு நூல்கள், ஏற்கெனவே வெளிவந்துள்ளன. ஆயினும் அவற்றின் பிரதிகள் தற்போது கிடைத்தற்கு அரியனவாகிவிட்டன. அவர் மொழிபெயர்த்த பிறமொழிக் கதைகளும், கோடை நதி என்ற நாவலும், இலக்கியம் சார்ந்த கட்டுரைகளும் இதுவரை நூல் வடிவில் வெளிவரவுமில்லை. இவற்றில் கோடை நதி தவிர்ந்த ஏனையவற்றை, மிகுந்த சிரமங் களுடன் சுவடிகள் காப்பகத்திலும், சில தனிநபர்களிடமும் பெற்று - ஏற்கெனவே நூல்வடிவில் வந்தவற்றையும் சேர்த்துத்தான், இப்பெருநூல் தயாரிக்கப் பட்டுள்ளது. இவ்வரிய பணியை கரவெட்டி பிரதேசச் செயலரின் ஆதரவுடன், கலாசார அலுவலர் அ. சிவஞானசீலன் மற்றும் த. அஜந்தகுமார் ஆகியோர் செய்துள்ளனர். நிதி ஆதரவை பிரதேசச் செயலகமும், கனடா விலுள்ள தேடகம் அமைப்பும் வழங்கி யுள்ளன. முக்கியமான எழுத்தாளர் ஒருவரின் அரிதான படைப்புகளை ஆவணமாக்கிய இச்செயல், பாராட்டப்படவேண்டிய முன்னு தாரணமாகும்!




இவ்வுதாரணத்தை ஏனைய பிரதேசச் செயலகங்களும் கடைப்பிடிக்க வேண்டும். அதனால் நமது கலை இலக்கியத் துறைக்கு மிகுந்த பயன் ஏற்படும். 1958 அளவில் சுன்னாகத்திலிருந்து வெளியான **கலைச்செல்வி**; கோப்பாயைச் சேர்ந்த பஞ்சாட்சர சர்மா முதலி யோர் வெளியிட்ட **மறுமலர்ச்சி**; பாரதி, **திசை** ஆகியவை ஈழத்து இலக்கிய வரலாற்றில் முக்கியமானவை.

இவ்விதழ்கள் தொடர்புறும் பிரதேசச் செயல கங்கள், கிடைத்தற் கரியனவான இவ்விதழ் களின் தொகுப்பை அச்சு வடிவில் வெளிக் கொணர வேண்டும் ! கலாசார அலுவலரின் விழிப்புணர்வு இன்றியமையாதது! ⊘

## அரசையாவுக்கு அஞ்சலி!



புகழ்பெற்ற பல்துறைக் கலை ஞரான அரசையா (எஸ். ரி. அரசு), 17. 02. 2016 இல், தனது 90 ஆவது வயதில் கால மானார். அவருக்கு 'தெரிதல்' தனது அஞ்சலியைச் செலுத்துகிறது!

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த இவர், நாடக நடிகனாகவும், இயக்குநராகவும், ஒப்பனையாளராகவும், ஒளிப்படக் கலைஞனாகவும், சிற்பியாகவும் பணியாற்றிப் புகழ்பெற்றவர். நாடகத்துறையில் பலருக்கு வழிகாட்டி, அவர்களின் வளர்ச்சியை ஊக்குவித்தவர்.

சொக்கன், சு.வே., குழந்தை ம. சண்முகலிங்கம் முதலியோரின் நாடகங்கள் பலவற்றை நெறியாள்கை செய்துள்ளார். ஈழத்துத் திரைப்படங்களான **குத்துவிளக்கு, ரக்சி ட்ரைவர், இனியவன்** முதலியவற்றில் நடித்துள்ளார்.

1961 இல் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் போது, ஒரு கடற்படை வீரனின் துப்பாக்கி முனையில், யாழ்ப்பாணம் கச்சேரி அருகில் - தெருவில் இவர் படுத்து மறியல் செய்ததைக் காட்டும் ஒளிப்படம், மிகவும் பிரபலமானது! ⊘



ஒளிப்படம் : அமரதாஸ்

### வாழ்தல்

உமது கொடையாய் விரிகின்றன
எனது பொழுதுகள்.

நான் திறந்து என்னை வாசித்து,
எனக்குள்ளே என்னைக் கடந்து....

வெளிப்படுத்தமுடியாத கவிதையாய்
உமது அமர்வுகளோடு,
உன்னதங்கொள்ளும் மாலைப்
பொழுதுகள் எனக்கானவை.

உயிர்முனையில் தட்டி,
ஒலிசெய்யும் விஞ்ஞானி நீர்.

பரிசுத்தம் பொலியும் இருப்பையும்,
பரவசத்தின் வார்த்தைகளையும்,
ஆசித்துச்செல்கின்றன பறவைகள்.

முடிவின்றித் திறக்கிறது இதயக்கதவம்.

- யோகி
2010

இளைய தலைமுறைக்கான கலை - இலக்கிய இருதிங்கள் இதழ்

# தெரிதல்


நான் சொல்கிறேன் என்பதாலேயே நீ ஏற்றுக்கொள்ளாதே; உன் பகுத்தறிவினால் நான் சொல்வதையெல்லாம் கேள்விக்கு உரியதாக்கு; உனக்கு நீயே ஒளியாக இரு!
-புத்தர்

## ஆவணப்படுத்தல் .... !

யாழ்ப்பாணத்தில் அண்மையில், தவில்மேதை தெட்சணாமூர்த்தி பற்றிய ஆவணப் பட வெளியீடு நடைபெற்றது; மறுநாள் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில், சுப்பிரமணிய பாரதி என்னும் ஆவணப் படத்தின் காட்சிப்படுத்தலும் உரைகளும் இடம்பெற்றன. இரண்டு ஆவணப் படங்களையும் உருவாக்கிய நெறியாளர், தமிழகத்தைச் சேர்ந்த அம்ஷன்குமார் ஆவார்.

யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலும் இளைஞர் பலர் குறும்பட முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர்; பலரின் படைப்புகள் கவனத்தை ஈர்ப்பனவாகவும் உள்ளன. படவிழாக்களில் அவற்றில் சில விருதுகளையும் வென்றுள்ளன. திரைப்படத் துறைமீதான ஆர்வம், டிஜிற்றல் கருவிகள் தரும் இலகு வசதிகள் முதலியன இவர்களின் செயற்பாடுகளை அகலித்தபடியுள்ளன. பட்டறிவினால் இவர்களின் வினைத்திறன் மேம்படுமெனவும் நம்பலாம்.

குறும்படங்களுக்கு அப்பால், ஆவணப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் பல நமது சூழலில் உள்ளன. தத்தம் துறைகளில் ஆளுமைகளை வெளிக்காட்டிப் பங்களித்த படைப்பாளிகள், நாடக - கூத்துக் கலைஞர்கள், சமூகப் பெரியார்கள் பலர் உள்ளனர். குவிமையப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டிய வெவ்வேறு விடயங்களும் உள்ளன. இவையெல்லாம் பற்றீடுபாட்டுடனும், உரிய ஆய்வுச் செயற்பாடுகளுடனும், கலைத்துவ உணர்வுடனும் ஆவணப் படங்களாக உருவாக்கப்பட வேண்டும். வயதில் மூத்த படைப்பாளிகள், கலைஞர் பற்றிய முயற்சிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுதல் நல்லது. வயதினாலும் மூப்பின் தாக்கங்களாலும் அவர்கள் மறைந்துவிடுமுன்னர், அவர்கள் வாழும்போதே - அவர்தம் பெருமையும் பங்களிப்பும் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

சமூகப் பொறுப்புணர்வுகொண்ட வசதிபடைத்தோர் - குறிப்பாக புலம்பெயர்ந்தோர், நிறுவனங்கள் எல்லாம் இவ்வாறான ஆவணப் பட முயற்சிகளுக்குத் தமது பொருளாதார உதவிகளை வழங்குவது, காலத்தின் தேவையாக உள்ளது!

மாசி மாதம் 21 ஆம் திகதி,
உலக தாய்மொழித் தினமாகும்.
தமிழில் கையெழுத்திடவும்
நடைமுறை வாழ்வில்
தமிழைப் பயன்படுத்தவும்
உறுதிபூணுவோம் !

# நான் கண்ட தெட்சணாமூர்த்தி!

நவாலியூர் நடேசன்

தவில் மேதை தெட்சணாமூர்த்திக்கு எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கும், நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவில் ஏழாம் திருவிழாவிற்கு வந்தார். கழுத்தில் சங்கிலி, கைச்சங்கிலி, காதுகளில் வெள்ளைக்கல் தோடு இவ்வண்ணம் அவர் பளிச்சென அழகான சிறுவனாக விளங்கினார். அன்றுதான் அவரைக் கண்டேன்; இந்தப் பொடியன்தான் தவில் வாசிக்கப் போகிறான் என்று எல்லோரும் அவனை ஆர்வமாகப் பார்த்தார்கள்.

சிவந்த மேனி, ஊடுருவிப்பார்க்கும் அகன்ற கண்கள், வாயில் வெற்றிலைச் சிவப்பு கனிந்த ஒருவர் - கோவில் முன்றல் மணலில் தனது குழுவினர் சூழ, தெட்சணாமூர்த்தியைத் தனது அருகில் வைத்துக்கொண்டிருந்தார். தெட்சணாமூர்த்தி துடியாட்டம்மிக்க சிறுவனாகத் தவில் சொற்களைச் சொல்லித் தாளம் போட்டு, உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்தார். தெட்சணாமூர்த்தியின் குறும்புப் பேச்சையும், சுறுசுறுப்பையும் அந்தப் பெரியவர் அன்பு கனியப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார். அவர்தான் தெட்சணாமூர்த்தியின் தகப்பன் என்று நான் நினைத்தேன்.

கச்சேரி செய்வதற்காக அந்தப் பெரியவருடன் தெட்சணாமூர்த்தி, கோவில் முன் மண்டபத்தில் வந்து உட்கார்ந்தார். அப்போது தடித்த மேனியும் குடும்பியுமாக ஒருவர் தவிலைக் கொண்டுவந்து, தெட்சணாமூர்த்தியின் முன்னால் வைத்தார். அவர்தான் தெட்சணாமூர்த்தியின் தகப்பன் விஸ்வலிங்கம் என்றும், அந்தச் சிவலைப் பெரியவர் தெட்சணாமூர்த்தியின் குரு காமாட்சிசுந்தரம் என்றும் சிலர் பேசிக்கொண்டார்கள்.

தனது குரு வாசித்ததை தெட்சணாமூர்த்தியின் பிஞ்சு விரல்கள் அப்படியே வாசித்தன. அவரின் குருவும் நாதஸ்வர வித்துவான்களும் தாளம் போட்டு, அவருக்கு உற்சாகமூட்டினார்கள்.

விடிந்து சுவாமி வடக்கு வீதிக்கு வந்ததும் தவில் சமா தொடங்கியது இந்தியாவிலிருந்து வந்த புகழ்பெற்ற தவில் வித்துவான்களும், சிறந்த உள்ளூர் வித்துவான்களும் கலந்து கொண்ட அந்தச் சமாவில், தெட்சணாமூர்த்தி சிரிப்புத்தவழ தாளம் போட்டு மிக உற்சாகமாக வாசித்தார். அவர் வாசிக்கும்போது, இந்திய வித்துவான்கள் அவரைக் கூர்ந்து பார்த்தபடி தாளம் போட்டார்கள்!

சிறுவன் ஒருவன் வாசிக்கிறான் என்ற அபிமானத்தில், ரசிகர்களின் தலைகள் அவரின் வாசிப்பிற்கு ஆடின. சின்னப்பிள்ளை என்ற பாட்டி கடுக்கன் ஆட தலை ஆட்டியமை, இன்றும் என் மனதில் பட மாகப் பதிந் திருக் கிறது.



அன்று தொடக்கம் தெட்சணாமூர்த்தி இசையுலகிலே என் 'கதாநாயகனாக' இடம் பிடித்துக்கொண்டார். அவர் எங்கு கச்சேரி செய்தாலும், நான் சென்று ரசித்தேன். அவர் கச்சேரிக்காக வந்து அமர்வது, மல்லிகைப் பூவாக சிரிப்பது, தவிலுக்குச் சுருதி சேர்ப்பது எல்லாம் ஒரு கலையாக இருப்பது போல் நான் ரசித்தேன்.

தந்தை விஸ்வலிங்கம், தெட்சணாமூர்த்தி ஆறுவயதாக இருக்கும்போது தானே தவிலைக் கற்பித்த பின்பு, இணுவில் சின்னத் தம்பியிடம் கற்பதற்காக மகனை அனுப்பினார். தவில் வாசிப்பு நுட்பங்களில் தேர்ந்தவனாக மகன் உயர வேண்டும் என்று, யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற தவில் வித்துவான் காமாட்சிசுந்தரத்திடம் கற்க ஏற்பாடு செய்தார். தெட்சணாமூர்த்தி அவர் வீட்டிலேயே தங்கியிருந்து கற்றார்.

விஸ்வலிங்கம் பகல் முழுவதும் சாப்பிடாமல் அம்பாளுக்கு விரதமிருந்து, இரவு விளக்கேற்றிய பின், மாட்டுச் சாணியால் மெழுகிய வீட்டுத்திண்ணையில் சோறுபோட்டுத் தினமும் சாப்பிட்டே, தெட்சணாமூர்த்தியின் அரங்கேற்றத்தை இணுவிலில் செய்தார். இச்செய்தியை யாழ்ப்பாணம் கூட்டுறவு வங்கியின் ஊழியரான தெட்சணாமூர்த்தியின் அண்ணன் மகாலிங்கம், எனக்குச் சொன்னார்.

அந்தநாட்களில் தெட்சணாமூர்த்தி வாசிக்கும் கோவில் திருவிழாக்கள் தனிச் சிறப்புப் பெற்றவையாக, ரசிகர்கள் கூடினார்கள். தமிழ்நாட்டிலிருந்து திருவிழாக்களுக்கு வருகைதந்த பெரிய தவில் வித்துவான்களாகிய வலங்கைமான் சண்முகசுந்தரம், தங்கவேல், முத்துவீர்,

(→பக்.11)

# தகவற் களம்

## சுவாமி ஞானப்பிரகாசர்



சமூகவெளி படிப்பு வட்டம் ஒழுங்குசெய்த சுவாமி ஞானப்பிரகாசர் (1875 - 1947)பற்றிய கருத்தரங்கு, 24. 01. 2016 மு. ப. 10. 00 மணிக்கு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. தொடக்க உரையை தெ. மதுசூதனனும், சிறப்புரையை அருட்பணி தமிழ் நேசன் அடிகளும் நிகழ்த்தினர் ; தொடர்ந்து கருத்துரைகள் இடம்பெற்றன.

மானிப்பாயில் பிறந்த சுவாமி ஞானப்பிரகாசர் - தமிழர் வரலாறு, தொல்லியல், மொழியியல், கத்தோலிக்க சமயம் முதலிய துறைகளில் ஆழமான ஆய்வுகளை மேற்கொண்ட அறிஞர். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் உட்பட சுமார் 72 மொழிகளில் புலமை பெற்றிருந்தவர்; இவரது புலமைத் திறனை அங்கீகரித்து, ஜேர்மனிய அரசாங்கம் முத்திரையொன்றையும் முன்பு வெளியிட்டுள்ளது. 1981 இல், இலங்கை அஞ்சல் திணைக்களமும் முத்திரையை வெளியிட்டது.

தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும் (1920), யாழ்ப்பாண வைபவ விமரிசனம் (1928), சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி (ஆறு பாகங்கள்), Kings of Jaffna during the Portuguese Period (போர்த்துக்கீசர் காலத்தில் யாழ்ப்பாண அரசர்கள்),History of Jaffna under the Portuguese and Dutch Rule, a critical history of Jaffna (போர்த்துக்கீசரினதும் டச்சுக்காரரினதும் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாண வரலாறு - ஒரு யாழ்ப்பாண வரலாற்று ஆய்வு), இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை வரலாறு 1505 - 1602, யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க சமயம் (1926) முதலியன, அச்சில் வந்த அவரது நூல்களில் சிலவாகும்.

அச்சில் வெளிவராமலுள்ள நூல்கள் சிலவும் உள்ளன. அவை வருமாறு : தமிழரின் ஆதியிருப்பிடமும் பழஞ் சீர்திருத்தமும், பரராச சேகரன் (நாவல்), இலங்கைக் கத்தோலிக்க இலக்கியத்தின் சரித்திரம், விஞ்ஞான அகராதி (ஐந்து பாகங்கள்), ஆங்கில தமிழ் அகராதி, அருட்பெருஞ் சோதி, சிங்களமும் தமிழும்.


## புத்தெழுச்சிக்கு அடிப்படை மறுமலர்ச்சி இயக்கமாகும்!



“இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கருவாகி உருவான காலப்பகுதி, ஈழத்தின் நவீன தமிழிலக்கிய வரலாற்றிலே ஒரு புத்தெழுச்சி ஏற்படத் தொடங்கியிருந்த காலமாகும். கடந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து முளைவிடத் தொடங்கியிருந்த ஈழத்தின் நவீன தமிழிலக்கியம் அதன் நோக்கிலும், பொருளிலும், வடிவமைப்பிலும் நவீன பண்புகளை நிறைவாகப் பெறத் தொடங்கிய காலம், 1940 ஆம் ஆண்டை அடுத்த காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் உருவான இப் புத்தெழுச்சிக்கு அடிப்படையாக அமைந்தது ‘மறுமலர்ச்சி’ இயக்கமாகும். **ஈழத்தின் மண்வாசனையும், சமூகப் பார்வையும் கொண்டனவாக** இலக்கியங்கள் அமைய வேண்டுமென்பதே, மறுமலர்ச்சிக் குழுவினரின் முக்கிய குறிக்கோளாகும். அச்சங்கத்தைச் சார்ந்து இயங்கியவர்களில் அ. செ. முருகானந்தன், கனக செந்திநாதன் ஆகியோரது ஆக்கங்களில் இப்பண்புகளைத் தெளிவாக அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஈழத்தமிழர்களின் சமூக பண்பாட்டு அம்சங்களும், அவர்கள் மத்தியில் நிலவிய சாதி ஏற்றத்தாழ்வு, பொருளாதார ஏற்றத்தாழ்வு என்பனவும், இவர்களது படைப்புகளில் பிரதிபலிக்கத் தொடங்கின.”

- பேராசிரியர் **சு. வித்தியானந்தன்**
17. 10. 1986

## ஆங்கிலத்தில் ஈழத்துப் படைப்புகள்!




Uprooting the Pumpkin என்னும் பெயரிலான நூலொன்றை, புதுடெல்லியிலுள்ள ஒக்ஸ் ஃபோட் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. ஈழத் தமிழ் இலக்கியத்திலிருந்து, எழுத்தாளரின் கால அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட கவிதை, சிறுகதை, நாடகம் ஆகியன இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இத்தெரிவுகளைச் செய்து தொகுத்திருப்பவர், ரொறொன்ரோ பல்கலைக் கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராகக் கடமையாற்றிய - மறைந்த செல்வா கனகநாயகம் ஆவார்.

ஏ. ஜே. கனகரத்தினா, லக்ஷ்மி ஹோம்ஸ்ரோம், செல்வா கனகநாயகம், இ. முருகையன், சோ. பத்மநாதன், எஸ். ராஜசிங்கம், சி. சிவசேகரம், கோவர்த்தனன் ராமச்சந்திரன், காஞ்சனா தாமோதரன் ஆகியோர் மொழிபெயர்ப்புகளைச் செய்துள்ளனர்.

மஹாகவி, நீலாவணன், தா.இராமலிங்கம் முதலிய 24 கவிஞரின் கவிதைகளும் ; குழந்தை சண்முகலிங்கத்தின் ஒரு நாடகமும்; தெளிவத்தை ஜோசப், செ. கதிர்காமநாதன், செ. யோகநாதன் முதலிய 15 பேரின் சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன.

எமது இலக்கிய வளத்தைப் பிறமொழியினரிடம் கொண்டுசேர்க்கும் இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகள், மதிப்புடன் பாராட்டி ஊக்குவிக்கப்பட வேண்டியவை. நமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறையினரும், அக்கறையுடன் இத்துறையில் செயற்படவேண்டுமெனப் பலரும் எதிர்பார்க்கிறார்கள்!

## அம்ஷன்குமார்



தமிழகத்தைச் சேர்ந்த முக்கிய ஆவணப்பட நெறியாளரான அம்ஷன்குமார், யாழ்ப்பாணம் வந்திருந்தார். புகழ்பெற்ற தவில் மேதை - மறைந்த தெட்சணா மூர்த்தி பற்றி அவர் உருவாக்கிய ஆவணப் பட வெளியீடு, 30. 01. 2016 சனிக் கிழமை நடைபெற்றது; அவ்விழாவில் பங்குபற்றவே அவர் வந்தார்.


மறுநாள் மாலை, யாழ்ப்பாணப் பொதுநூலக கேட்போர்கூடத்தில், திரையாவணம் என்னும் தலைப்பில் அவர் உரையாற்றினார்; அவரது சுப்பிரமணிய பாரதி என்னும் ஆவணப்படத் திரையிடலைத் தொடர்ந்து, அவருடனான கலந்துரையாடலும் நடைபெற்றது.

அம்ஷன்குமாரின் முக்கியமான சில ஆவணப் படங்கள் வருமாறு 1. மூன்றாம் அரங்கு, 2. சுப்பிரமணிய பாரதி, 3. சுதந்திரத்திற்குப் பின் தமிழ் நாடகங்கள் 4. அசோகமித்திரன், 5. சர். சி.வி. ராமன், 6. தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர், 7. பாடகர் மணக்கால் எஸ். ரங்கராஜன், 8. எம். எஸ்.சுவாமிநாதன், 9.எஸ்.எஸ்.வாசன், 10.பத்திரிகையாளர் பாரதி, 11.மகாகவி பாரதி, 12.தமிழ்நாட்டின் நவீனக் கலை, 13.யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தி.

கி. ராஜநாராயணனின் கிடை குறுநாவலை அடிப்படையாகக் கொண்டு, **ஒருத்தி** என்ற முழுநீளத் திரைப்படத்தையும் உருவாக்கியுள்ளார்; அத்திரைப்படம் முக்கியமானதொரு மாற்றுத் திரைப்படமாகும்.

இவை தவிர அவர் எழுதிய, சினிமா ரசனை (1990), சினிமா ரசனை (விரிவான பதிப்பு 2012), ஒருத்தி (திரைக்கதை வசனம் - 2005), பேசும் பொற்சித்திரம் (2007), மாற்றுப்படங்களும் மாற்று சிந்தனைகளும் (2013) ஆகிய நூல்களும் முக்கியமானவை யாகும்.

# யாழ்ப்பாணம் அரங்கக் கலைக்கழகம்



இன்றைய காலகட்டத்தில் தமிழர் பிரதேசங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் அரங்குசார் நிறுவனங்களில், யாழ்ப்பாணம் அரங்கக் கலைக்கழகமானது பலராலும் பேசப்படக்கூடிய ஓர் அரங்க நிறுவனமாகத் திகழ்கின்றது. 2000 ஆண்டுக் காலப்பகுதியில் இருந்து பாடசாலைசார் அரங்க நிகழ்வுகள், பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் போன்ற செயற்பாடுகளில் பெயரிடப்படாத வகையில் - முழுநேரமாகத் தன்னை ஈடுபடுத்திவந்த தி.தர்மலிங்கம் அவர்களினது சிந்தனையின் வெளிப்பாடாக, 2008 ஆம் ஆண்டு தொடக்கம், யாழ்ப்பாணம் அரங்கக் கலைக்கழகம் எனும் பெயருடன் செயற்பட்டு, 2011 ஆம் வருடம் பதிவுசெய்யப்பட்ட ஓர் அரங்க நிறுவனமாகி, 2015 ஆம் வருடம் மார்கழி மாதம் 6 ஆம் திகதியன்று, அங்குரார்ப்பண நிகழ்வுடன் யாழ்ப்பாணம் அரங்கக் கலைக்கழகம் எனும் பெயர்ப்பலகை தாங்கி, இல. 66, உயரப்புலம், ஆனைக்கோட்டை எனும் முகவரியில் இயங்கிவருகின்றது.

யாழ்ப்பாணம் அரங்கக் கலைக்கழகம் தனது இன்றைய செயற்பாடுகளாக நாடக ஆற்றுகைகள், அரங்க மற்றும் திரைப்படக் கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள், விழிப்புணர்வுசார் தெருவெளி நிகழ்த்துகைகள், குறுந்திரைப்படம் - விவரணத் திரைப்படத் தயாரிப்புக்கள், பாடசாலைசார் அரங்கச் செயற்பாடுகள், கோமாளி அரங்கச் செயற்பாடுகள், சிறுவர் நாடகங்கள் போன்ற அரங்க திரைப்படம்சார் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.



யாழ்ப்பாணம் அரங்கக் கலைக்கழக நிகழ்த்துகைகள் யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் ஆற்றுகை செய்யப்பட்டது மட்டுமன்றிப் பிற மாவட்டங்களான திருக்கோணமலை, கொழும்பு, கதிர்காமம், மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களிலும் பல தடவைகள் நடைபெற்றுள்ளன.

யாழ்ப்பாணம் அரங்கக் கலைக் கழகத்தால் தயாரிக்கப்பட்ட **எங்கள் கதை** என்ற வீதி நாடகமானது சமூகச்சீர்கேடுகள், பாலியல் துஷ்பிரயோகம், போதைப் பொருள் பாவனை என்பனவற்றின் தீமைகளை எடுத்துக்கூறி அவற்றில் இருந்து மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியதன் தேவைப் பாட்டையும் கூறிச்செல்கின்றது,

**மக்கள் சக்தி** என்ற வீதி நாடகமானது, ஒவ்வொரு தனிமனிதனும் சமூகத்தின்மீது அக்கறைகொண்டு, தத்தமது தேவையைத் தாமே கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் கூறுவதை நோக்கமாகக் கொண்டு ஆற்றப்பட்டது.

**கசிப்பரசன்** என்ற தெருவெளி ஆற்றுகை, கசிப்பைக் குடிக்கும் ஒவ்வொரு தலைமகன் வீட்டிலும் நிகழும் துயரச் சம்பவங்களையும் சமூகச் சீரழிவுகளையும் எடுத்துக் கூறி, அதிலிருந்து கசிப்புப் பாவனையாளர்கள் விடுபட வேண்டியதன் அவசியத் தையும் உணர்த்தியுள்ளது.

மேலும், **டெங்கு** விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், டெங்கு எனும் நாடகமும், **மிதிவெடி** விழிப்புணர்வை ஏற்படுத்தும் மிதி வெடி நாடக ஆற்றுகையும், வலிகாமத்தில் மீள் குடியேறிய மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகளில் விழிப்படையச் செய்யும் The Land Law எனும் நாடகமும், வீதி நாடகங்களாக ஆற்றுகை செய்யப்பட்டன.


இலங்கை கலாசார அமைச்சால் நடத்தப்பட்ட



தேசிய அரச நாடகப் போட்டியில் **மண்ணாக்கல், கோளத்தின் கோலம், பாடுகள் சுமந்தவர் புழுதியில் கிடக்கிறார்** போன்ற நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. பாடசாலை மற்றும் பல்கலைக்கழக அரங்குசார் செயற்பாடுகளில், பல்வேறு நாடகங்கள் நெறியாள்கை செய்யப் பட்டன,

சிவராத்திரி திருவிழாக்கால நிகழ்வுகளில், **காத்தவராயன்** சிந்துநடைக் கூத்து மற்றும் நகைச்சுவை நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இவற்றில் **தில்லாலங்கடி** நகைச்சுவை நாடகம் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் அரங்கக் கலைக்கழகமானது 2016 ஆம் ஆண்டிலிருந்து, ஞாயிறுதோறும் Welcome to Sunday show எனும் பெயரில், நாடக ஆற்றுகைகளை நிகழ்த்திவருகின்றது. அதனடிப்படையில், **அவலம், நுளம்பு, கறள்,**



**வரைவாளி, கருச்சிதைவு, அகால நிலம், அரும்பு** போன்றன அரங்கக் கலைக்கழகத்தின் உள்ளக மற்றும் வெளி அரங்கில் மேடை யேற்றப்பட்டன.

அதேபோன்று, யாழ்ப்பாணம் அரங்கக் கலைக்கழகம் தனது திரைத் தயாரிப்புக்களாக **ஏன், வன்மம், Health Communication, வடு, கெடு, காவு** போன்ற குறும்படங்களையும்; **சத்தியமே ஜெயம்** எனும் ஆவணநாடகத்தினையும் (Docudrama), **பொன்வண்டு** எனும் ஆவணப் படத்தினையும் தயாரித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு, யாழ்ப்பாணம் அரங்கக் கலைக்கழகம் தனது அரங்கச் செயற்பாடுகளைப் பல்வேறுபட்ட தளங்களில் மேற்கொண்டு வருவதோடு, அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கும், அரங்கக் கற்றலுக்கும் ஆற்றுகைக்குமான ஒரு வெளியாகத் திகழ்கின்றது!

– கூத்தன் ⊘

# தாரே ஸமீன் பார்

- அனோஜன் பாலகிருஷ்ணன்




விதிவிலக்காக நல்ல திரைப்படங்கள் ஹிந்தியில் வருவதுண்டு. அப்படி வருவதில் சில படங்கள் மட்டுமே அதிர்ஷ்டவசமாகப் பார்க்கக் கிடைக்கும். அப்படிப் பார்த்ததில் சிலாகிக்கக்கூடிய திரைப்படம்தான், 2007இல் வெளிவந்த தாரே ஸமீன் பார். அமீர்கான் மீது எனக்குத் தனிப்பட்ட நம்பிக்கை, அவரது சமூகச் செயல்பாடுகளை ஒட்டி இருக்கின்றது. இப்படத்தின் குறுவட்டு கைக்குவந்தபோது, எந்த நம்பிக்கையும் இன்றி – முன் எடுகோள் எதுவும் இன்றி – பார்க்கத் தொடங்கினேன்.

வசதியான பொருளாதார நிலையினைக் கொண்ட குடும்பத்தில் – அப்பா, அம்மா, அண்ணாவோடு சேர்ந்து கடைசிப் பிள்ளையாக இஷான். இஷான் எப்போதும் கற்பனை உலகில் சஞ்சரிப்பவன்; அவன் தனது கற்பனையில் தினமும் வாழ்கின்றான். இரண்டாம் ஆண்டில் பெயிலாகி, மீண்டும் இரண்டாம் ஆண்டில் படித்துக் கொண்டிருக்கின்றான். படிப்பில்தான் அவனுக்குப் பிரச்சினை. எழுத்துக்களை வேறு பிரித்தறியவோ, நினைவில் தக்கவைத்துக் கொள்ளவோ, வாசிக்கவோ முடிவதில்லை. விளையாட்டில் ஒரு பந்தைக்கூட சீராக இலக்குவைத்து எறிய முடிவதில்லை. எழுத்துக்கள் எல்லாம் இடம் மாறி, அவனது கற்பனையில் புகுந்து பரவசப்படுத்துகின்றன. சராசரிப் 'பொடியன்' கள்போல் – வயதிற்குத் தகுந்தாற்போல் அவனால் எழுத முடியவில்லை. பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் மிக குறைந்த மதிப்பெண்கள். மற்ற எல்லா விஷயங்களிலும் அவன் ஓர் இயல்பான, துடிப்பு மிக்க, குறும்புத்தனமான பொடியன். அவனால் மிகுந்த கற்பனை ஆற்றலுடன் ஓவியம் வரைய முடிகின்றது.

படிப்பில் நிலைமை மேலும் சிக்கலாக, பள்ளி நிர்வாகம் அடுத்த வருடம் தொடர்ந்து படிக்க, அவனுக்கு அனுமதி மறுக்கின்றது. எல்லைமீறிய செல்லத்தினாலும் விளையாட்டுத்தனத்தாலும் அவன் இப்படியாகிவிட்டதாகக் கருதும் தந்தை, அவனைத் தனியாக வேறொரு ஊரிலிருக்கும் பள்ளியில் சேர்க்க முடிவு செய்கிறார். அங்கேயே ஆசிரியர்களின் கண்காணிப்பில் விடுதியில் தங்கிப் படிக்க வேண்டும் ; இது அவனது நிலையை மாற்றும், படிப்பில் கவனம் குவியும் என்று நம்புகின்றார்.

இஷான் போக மறுக்கிறான். அப்பா, அம்மாவின் ஸ்பரிசத்தில் இருந்து விலகிச் செல்வதனைக் கடுமையாக மறுத்து, அழுது அடம் பிடிக்கிறான். பெற்றோருக்கும் மனதினுள்ளே வலிகள் இருந்தாலும், அவனின் நன்மை கருதி புதிய பாடசாலையில் சேர்த்துவிடுகின்றனர். புதிய சூழல் அவனைப் பயப்படுத்துகின்றது. ஒருவித தனிமையில் தன்னை ஒப்படைக்கின்றான். அப்பா, அம்மாமீது தாங்க முடியாத கோபத்தில் இருக்கின்றான். தனிமையில் அவனது சோகங்கள் கரைகின்றன.

வகுப்பறையில் அவனது இயலாமை புரிந்துகொள்ளப்படாமால் போகின்றது, ஆசிரியர்களால் தண்டிக்கப்படுகிறான்; கிண்டலடிக்கப்படுகிறான். சக மாணவனான கால் ஊனமுற்ற ஒருவன் மட்டும், அவனுக்கு ஆறுதலாக இருக்கிறான். இஷானும் அவனுடன் நெருக்கமான நண்பன் ஆகின்றான். இருவருக்கும் இடையிலான நட்பு ஆழமாகச் சில காட்சிகளில் சொல்லப் படுகின்றது.


இந்நிலை தொடர்ந்துகொண்டிருக்க, பள்ளிக்குப் புதிய – தற்காலிக ஓவிய ஆசிரியராக வருகிறார் நிகும்ப் (அமீர்கான்). கற்பித்தலில் புதிய அணுகுமுறைகொண்ட இளைஞராக அவர் இருக்கிறார். முதல் நாளே தனது விசேஷ திறமையினால், எல்லாச் சிறார்களையும் கவர்ந்துவிடுகிறார். இஷான் மட்டும் அவருடன் ஒன்ற மறுக்கிறான். ஓவியமும் வரையாமல் ஒதுங்கிச் செல்லும் அவனுக்குள் ஏதோ பிரச்சினை இருக்கிறது எனப் புரிந்து கொள்ளும் அவர், அவனுடைய புத்தகங்களைப் பார்க்கிறார்.

அவன் விடும் பிழைகளின் ஒழுங்கு முறைகளை வைத்து, அவனுக்குக் கற்றல் குறைபாடு (Dyslexia) இருப்பதனைப் புரிந்து கொள்கின்றார். அவனுக்கு இருக்கும் வேறு திறமைகளைக் கண்டுபிடித்து, அந்த வழியில் அவனை ஊக்குவித்து, அவனுக்கு இருக்கும் பிரச்சினைகளைக் களையவேண்டும் என்பதனை உணர்கின்றார். அவனுடைய வீட்டுக்குச் சென்று பெற்றோரைச் சந்திக்கிறார். அங்கு அவன் வரைந்த படங்களைப் பார்த்து, அவனிடம் இருக்கும் ஓவியம் வரையும் அசாத்தியத் திறனைக் கண்டுகொள்கிறார். ஓவியத்தினைத் தூண்டுதலாக வைத்து, அவனது மையப் பிரச்சினையிலிருந்து அவனை மீடகமுயல்கின்றார்.

ஒரு நாள் வகுப்பறையில், கற்றல் குறைபாட்டுக்கான தோற்றப்பாடுகளை விவரித்துச் சொல்கின்றார். ஏனைய மாணவர்கள் அதனை நகைச்சுவையாக எண்ணிச் சிரிக்க, இஷான் மட்டும் அதிர்ச்சியடைகிறான்.

இறுதியில், இப்படியெல்லாம் ஒருவனுக்குத் தோன்றியிருக்கு; அவன் யார்? என்று கேட்க, அவன் தன்னைத்தான் கூறுகிறார் என்றெண்ணித் திகைக்கிறான். அவர் உடனே ஐன்ஸ்டீனின் படத்தைக் காண்பிக்கிறார். ஆச்சரியத்துடன் அவனிருக்க – வரிசையாக டாவின்சி, எடிசன், அபிஷேக்பச்சன் போன்ற பிரபலங்களின் படங்களைக் காட்டுகிறார். அவனது தாழ்வு மனப்பான்மையை நீக்க அவர் கையாளும் உத்திகள், அற்புதமான காட்சிப் படிமங்களாகின்றன. இறுதியாக இஷானிடம் தனியாக, "இந்தப் பாதிப்புக்குள்ளான இன்னொருவனைப் பற்றி மட்டும் நான் சொல்லவில்லை" எனச் சொல்ல, மீண்டும் இஷான் திகைக்க, "அது நான்தான்" என்கிறார் நிகும்ப்.

(→ பக். 8)



# அயல்

பேராசிரியர் **சிறி குணசிங்ஹ** சிங்களக் கலை - இலக்கிய உலகில் புகழ் பெற்றவர். நிசந்தஸ் என்னும் புதுக்கவிதை வடிவத்தைச் சிங்களத்தில் அறிமுகப்படுத்தியவர் இவர். 'மஸ் லே நத்தி அற்ற' (இரத்தமும் சதையுமற்ற எலும்பு) புதுக்கவிதைத் தொகுதி, அவருக்குப் புகழைக் கொடுத்தது. இவர் நெறியாள்கை செய்த சத்சமுதுர (ஏழு கடல்கள்) என்ற - மீனவர் களத்தைச் சித்திரிக்கும் திரைப்படமும் மிக முக்கியமானது. ரன்வன் கரல் (பொன்போன்ற நெற்கதிர்கள்) என்ற விவரணப் படத்தையும் உருவாக்கியுள்ளார்.

சமஸ்கிருதப் பேராசிரியரான இவர், தற்போது கனடாவில் வசிக்கிறார். இவர் முன்பு எழுதிய **ஹெவனல்ல** நாவல், **நிழல்** என்னும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு, கொழும்பி லுள்ள கொடகே புத்தகசாலையால் 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. சரோஜினி தேவி அருணாசலம் இதனைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

1940களில், கொழும்புப் பல்கலைக்கழகப் பின்னணியில் நாவல் கட்டமைக்கப் பட்டுள்ளது. பல்கலைக்கழகச் சூழல் மட்டுமல்லாது அக் காலத்திய கொழும்பு வாழ்க்கைப் பின்னணியும் விபரிக்கப்பட்டுள்ளது. வசதியான பொருளாதார நிலைகொண்ட ஜினதாச என்னும் இளைஞன், கிராமத்திலிருந்து கொழும்புக்கு, பல்கலைக் கழகக் கல்விக்காக வருகிறான். தந்தையற்ற நிலையில் தாயினதும், ஊரிலுள்ள விகாரையின் பெரிய பிக்குவினதும் போதனை களுக்குள் வாழ்ந்த அவனால், இங்குள்ள புதிய சூழலுக்கு இசைந்துபோக முடியவில்லை. பலராலும் பரிகசிக்கப்படுகிறான். ஆனால், விஜேபால என்ற நண்பனின் வழிகாட்டுதலில் - காலப்போக்கில் - மது அருந்துவது, களியாட்டங்களில் ஒதுங்காது பங்குபற்றுவது, பெண்களில் நாட்டம் கொள்வது என அவனது வாழ்க்கை மாற்றம் காணுகிறது. ஊருக்குச் செல்வதில்லை; அம்மாவின் கடிதங்களுக்கும் பதில் போடுவதில்லை. தாய் மகனின் நிலையை உறவினர் மூலம் அறிந்து ஏமாற்றம் அடைகிறாள்.

தனித்து - சுதந்திர உணர்வுடன் வாழ ஜினதாச விரும்புகிறான். ஆனால் அவன் காதலிக்கும் பெண்களை அவனால் வெற்றிகொள்ள முடியவில்லை. முதலில்




வினீதாவை விரும்பினான்; பிறகு குசுமா வலதன்னவை; இப்போது காந்தியை. பல மாதங்களாகக் காந்தியுடன் பழகி - அடிக்கடி பம்பலப்பிட்டிக் கடற்கரைப் பாறைகளிலும் போயிருந்து, அவளுடன் தனிமையில் கதைத்துப் பழகினான். ஆனால் ஒரு நாள், தான் சகோதரிபோல்தான் பழகியதாகக் காந்தி சொல்லிவிட்டாள். ஜினதாசவுக்கு ஏமாற்றம்; குழப்பத்தில் விரக்தியடைகிறான்.

இன்னும் வெவ்வேறு மனிதர்களின் தொடர்பும் வெவ் வேறுவகை அனு பவங்களும் அவனுக் குக் கிடைக்கின்றன. படிப்பில் அவ்வளவு நாட்டமில்லை. சுதந்திர மாக வாழ்க்கையை அனுபவிக்க விரும்பு கிறான். பரீட்சை அண்மிக்கையில் நீண்டகாலத்தின் பின் வீட்டுக்குச் செல்கிறான்; தாயிடம் மன்னிப் புக்கேட்டு அவளின் ஆதரவைப் பெற விரும்



பினான். ஆனால், முன்பு அன்பும் நேசமும் காட்டிய அம்மாவாக அவள் இல்லை; மாறிவிட்டாள். அவளின் அலட்சியம் அவனை உறுத்துகிறது; கொழும்பு திரும்புகிறான். மன அழுத்தத்தில், நண்பர்கள் அடிக்கடி போகும் - மருதானையின் சேரிப்புறத்தில் - விபசாரத் தொழில் நடத்தும் பொடி அக்காவின் குடிசைக்குச் செல்கிறான். ஆனால், அங்கும் அவனால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அவன் எழுந்து வெளியே சென்று விடுவதுடன், பின்வருமாறு நாவல் முடிகின்றது : ".... திரும்பி ஓடிவிடலாமா என்று யோசித்தான். ஜினதாச மீண்டும் திரும்பினான். நடைபாதை நெடுகிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை நீண்டு கிடந்த நிழல் ஜினதாசவுக்குத் தெரிந்தது. அது அவனுடைய நிழலாகவே அவனுக்குத் தோன்றியது. ஆனால், இன்று வரை அவன் காணாத நீண்ட பிரமாண்டமான ஒரு நிழல். இந்த நிழல் முழு நகரத்தையும் மூடிக் கொண்டதாக அவனுக்குத் தோன்றியது. இது என்னுடைய நிழலா? இவ்வளவு விசாலமாக இருக்கிறதே!"

ஒரு சுயசரிதைப் பாங்கான நாவல்போல் அமைந்துள்ளது. ஜினதாசவினது நினைவு களை, மொழி வெளிப்படுத்துகின்றது. அதற்குப் பொருத்தமாக, நனவோடை உத்தி பாவிக்கப் பட்டுள்ளது. இந்த நாவலின் மூலம், நனவோடை உத்தியைச் சிங்கள இலக்கியத்தில் அறிமுகப்படுத்தியவராகவும், சிறி குணசிங்ஹ குறிப்பிடப்படுகிறார். தமிழ் மொழிபெயர்ப் பாளரின் நடை வாசக ஈர்ப்பைத் தருவதாக அமைந்துள்ளமை பாராட்டத் தக்கது. எனினும் இரண்டொரு இடங்களில் பிசிறல்கள் இருக்கின்றன. **சட்டை பிளந்துபோகாமல்** (பக்.192) என்றிருப்பது, சட்டை கிழிந்து போகாமல் என்று வரவேண்டும். **அப்பத்தின் செட்டைபோல்** (பக்.70) என்றிருப்பது, அப்பத்தின் விளிம்பு என்று வருவது பொருத்தமாகும். பக்.76 இல், **குப்பங்களிலும் சேரிகளிலும்** என்றிருக்கிறது; ஈழத்தில் **குப்பம்** என்ற சொல் வழக்கில் இல்லை.

இறுதியாக, சிங்களக் கலை இலக்கியத் துறையில் முக்கிய ஆளுமைகளில் ஒருவரான, மதிப்புக்குரிய சிறி குணசிங்ஹவின் படைப்பைத் தமிழில் படிக்கக் கிடைத்தமை, மகிழ்ச்சியாக இருக்கிறது. மொழிபெயர்ப்பாளருக்கும், வெளியீட்டாளருக்கும் பாராட்டுகள்!

- பயணி -




ஈழத்தவரான பிரதீபன் செல்வா, புனே திரைப்பட தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் இறுதி ஆண்டு மாணவர். அவர் தற்போது **சருகுவெளி** என்னும் குறும்படத்தை உருவாக்கியுள்ளார். வெள்ளை வானில் கடத்தப்பட்டுக் காணாமல்போன மகனைப் பற்றிய துயரிலும், அவன் உயிரோடு இருப்பான் என்ற நம்பிக்கையிலும் வாழும் ஒரு கிழவியை மையப்படுத்தியுள்ளது இது.

படம் ஆரம்பிக்கையில் திரையில் இருள். ஒலித்தடத்தில், "நம்பிக்கையுடன் இருக்கிறன்.... காணாமல் போனவங்க எங்கயாவது இருப்பினமெண்டு...." - பெண்குரல். திரையிலோ, நிர்வாணமாய் குப்புறக் கவிழ்ந்த நிலையில், ஓர் இளைஞன் கைகள் பின்னால் கட்டப்பட்டு, நிலத்தில் இழுத்துச் செல்லப்படும் காட்சிகள். "என்ர மகன்.... சாமம் ஒண்டரை மணி இருக்கும். கதவைத் தட்டி, விசாரிக்க வேணுமெண்டு வெள்ளை வானில ஏத்தினவை.... பதினைஞ்சு வருஷம் போட்டுது.... இண்டைவரைக்குமொரு தகவல் இல்ல." என்ற கிழவியின் குரல் கேட்கிறது.

பேரன் கத்தியைத் தீட்டுகிறான்.

கிழவி கதிரையில் இருக்கிறாள். "கடிதம் ஏதாவது வந்ததோ தம்பி?"

**- அ. யேசுராசா -**

மீன் வெட்டிக்கொண்டிருக்கும் பேரன், கிழவியைப் பார்க்கிறான்; கிழவியின் சோகத் தோற்றம். மீன் செதிளைச் செதுக்குகிறான். பின் ஒரேயடியாக அதனை வெட்டுகிறான். இது சித்திரவதை, கொலை போன்றவற்றை நினைவுபடுத்துகிறது!

லாம்பு கொளுத்தல்.... படுத்திருக்கும் கிழவிக்கு பேரன் 'மலப் போச்சி'யை (Bed pan) வைக்கிறான்.


வேறு ஒரு காட்சியில் கிழவி படுத்திருந்து, "உன்ர அப்பா உயிரோட இருந்திருந்தா.... வந்திருக்க மாட்டாரா?.... எத்தின வருஷ மாச்சு....?!" என்று பேரனிடம் கேட்கிறாள்.

பேரன் பைபிள் வாசிக்கிறான்:

"நெறிகெட்டவர்கள் உமது தூய மக்களினத்தை அடிமைப்படுத்த எண்ணிய போது, அவர்களே காரிருளில் அடிமைகளாகவும், நீண்ட இரவின் கைதிகளாகவும், தங்கள் வீடுகளுக்குள்ளேயே அடைக்கப்பட்டு, உமது முடிவில்லாப் பாதுகாப்பினின்று கடத்தப்பட்டார்கள்....

எந்த நெருப்பின் ஆற்றலாலும் ஒளி கொடுக்க இயலவில்லை. விண்மீன்களின் ஒளிமிகுந்த சுடர்களாலும் இருள்சூழ்ந்த அவ்விரவை ஒளிர்விக்க முடியவில்லை."

துணியைத் தண்ணீரில் தோய்த்துப் பிழிந்து, பேர்த்தியின் முகத்தைச் சுத்தப் படுத்துகிறான்.



"எனக்குத் தெரியும்.... அவன்.... எங்கயாவது உயிரோட இருப்பான்...."

பேரன் எழுந்து மௌனமாக நடக்கிறான். அவனது நினைவின் குரல்:

'ஆச்சி.... எனக்கு நம்பிக்கையில்ல.... வெள்ளை வானில கொண்டுபோனவங்க உயிரோட இருப்பாங்களெண்டு. இத்தின வருஷ நெருக்குவாரத்துக்குள்ள, எங்கட அடையாளத்தத் துலைச்சுப் போட்டம்.... முடிவில்லாம அலையிறம்....

கனவுகள் நசுக்கப்பட்டு.... ஏக்கங்கள் புதைக்கப்பட்டு....ஒவ்வொரு புதைகுழிக்குள்ளேயும் என்ர அப்பாவைத் தேடி....'

தோண்டப்பட்ட புதைகுழிகள், மண்குவியல்மேல் தெரியும் மண்டை ஓடுகள், அவன் சோகமாகப் பார்த்தல் ஆகிய காட்சிகள் தெரிகின்றன.

இரவு சாப்பாட்டுத் தட்டைத் தட்டிவிடுகிறாள் ; சோறு சிந்தப்பட்டு தட்டு நிலத்தில் விழுகிறது; அவனது கன்னங்களில் சோற்றுப் பருக்கைகள். மௌனமாக அழும் அவனது முகம். கன்னத்துச் சோற்றைத் துடைக்கிறான்; பேர்த்தியின் கடைவாயையும். கிழவி சப்பிச் சாப்பிடுகிறாள். அவளின் துயர முகம்.

கதவு தட்டப்படும் சத்தம். அச்சத்துடன் கதவைக் கிழவி பார்க்கிறாள். கதவை நோக்கிக் 'கமரா' செல்கிறது. இருளில் ஒருவர் பின் ஒருவராக மூவர் நுழைகின்றனர். பிறகு ஒருவன் தடியை ஓங்கி அடிக்கும் சத்தம்! குப்பி விளக்கு அணைகிறது. இருள். இது, மகன் கடத்தப்பட்ட இரவின் - கிழவியின் நினைவு தான்.

அடுத்த காட்சியில், பேரன் தனது அறையில் - கட்டிலில் ஜன்னலைப் பார்த்தபடி இருக்கிறான். வெளியில் வந்து வேலியில் உள்ள, பழைய - சிறிய தபால் பெட்டியைத் திறக்கிறான். வளைவான தும்புக் குவியலில் இரண்டு முட்டைகளும், ஒரு வெண்ணிற இறகும். அவற்றை எடுத்துக் கையில் வைத்தபடி பார்க்கிறான். ஒலித்தடத்தில் ஒற்றைக் குருவியின் சத்தம். பிறகு சத்தமிட்டுப் பறக்கும் குருவிகளின் சத்தம்; கூடவே, "கடிதம் ஏதாவது வந்ததோ தம்பி?" என்ற பேர்த்தியின் பழைய குரல்.

காணாமல்போனவர்கள் ஒரு நாள் தங்களிடம் வந்துசேர்வார்கள் என்ற நம்பிக்கையில் - துயரத்துடனும் - உறவினர் இருப்பதையே, படம் சொல்கிறது. படத்தின் முடிவில் அக்கருத்தைக் கூறும் வரிகள் சிலவும் காட்டப்படுகின்றன. காட்சிப்படுத்தல், இசை, பாத்திரங்களின் நடிப்பு நன்றாகவுள்ளன. கிழவியாக ஒரு மராத்தி நடிகையும், பேரனாக சேவா ஸௌஹனும் நடித்துள்ளனர். இசை: மலையாளியான வின்சென்ற். திரைச்சுவடி, ஒளிப்பதிவு, படத்தொகுப்பு, நெறியாள்கை ஆகியவற்றைப் பிரதீபன் செல்வா நேர்த்தியாகக் கையாண்டுள்ளார்.

பாலு மகேந்திராவுக்குப் பின் ஈழத்தமிழர்



ஒருவர், புனே திரைப்பட தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் பயில்கிறார்; அவரது இந்தப் படைப்பு, மிகுந்த நம்பிக்கையை அவர் மீது ஏற்படுத்துகிறது! ⊘

கட்டுரைகள், குறிப்புகள், கவிதைகள், சிறிய கதைகள், 'பகிர்வு' பகுதிக்கான கேள்விகள் வரவேற்கப்படுகின்றன. படிப்பகம் பகுதியில் வெளியிடுவதானால், நூலின் ஒரு பிரதியை அனுப்ப வேண்டும். ஆக்கங்கள் கையெழுத்தில் A 4 அளவு தாளில் 3 பக்கங்களுக்குள்ளும், கணினித் தட்டச்சென்றால் - 2 கணினிப் பக்கங்களுள்ளும் அமைதல் வேண்டும். ஆக்கங்களுக்குச் சன்மானம் வழங்கப்படும். அனுப்பவேண்டிய முகவரி: அ.யேசுராசா, 01, ஓடைக்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம். மின்னஞ்சல் : athanasjesu@gmail.com, தொ. பே. : 0777678257.

ஆண்டுச் சந்தா : உள்நாடு - 150 /=. வெளிநாடு - £ 5 பிரதி விநியோகம், சந்தா ஆகியவற்றுக்குத் தொடர்பு முகவரி : தி. செல்வமனோகரன், ஆடியபாதம் வீதி, கேணியடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொ. பே. : 0776577358.
மின்னஞ்சல்: chelvamanoharan@gmail.com

காசுக்கட்டளையை, திருநெல்வேலிச் சந்தி உப தபாலகத்தில் மாற்றக்கூடியவாறு, தி. செல்வமனோகரன் என்னும் பெயரில் பெற்று அனுப்பவும். வங்கிமூலம் அனுப்புவதாயின், தி. செல்வமனோகரன், சேமிப்புக்கணக்கு இல. 162- 2 - 001 - 9 - 0009661, மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளைக்கு அனுப்பவும். பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதியைத் தபாலில் அனுப்பிவிடவும். ⊘

# மீண்டும் தொடங்கும் மிடுக்கு

- த. அஜந்தகுமார்

மப்பன்றிக் காலமழை காணா மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது.
ஏர்
ஏறாது, காளை, இழுக்காது.
எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன்விளைப்பான்
என் ஊரான்.

ஆழத்து நீருக் ககழ்வான் அவன்.
நாற்று
வாழத்தன் ஆவி வழங்குவான். ஆதலால்
பொங்கி வளர்ந்து பொலிந்ததுபார்
நன்னெல்லு.


தங்கநகைகளே தலைக்கணிந்த பெண்களே
கூடிக்குனிந்து கும்மி கொட்டுவதும்,
காதினிக்கப்
பாடிக் கவலை பறக்கச் செய்கின்றதும்
போல்,
முற்றி, மனிதன் முயற்சிக்கு
இறைகொடுக்கும்
பொற்காசாம் நெல்லுப் பொதிசுமந்து
கூத்தாடும் அந்தப் பயிரின் அழகை
அளந்தெழுத
எந்தச் சொல் உண்டாம் எமக்கு?

அவ்வுழைப்பாளி
உள்ளம் நெகிழ்ந்தான்.
ஒரு கதிரைக் கொத்தாகக்
கிள்ளி முகர்ந்தான்
கிறுகிறுத்துப் போகின்றான்.

வாடும் வயலுக்கு வார்க்கா முகில், கதிர்கள்
சூடும் சிறுபயிர் மேல்
'சோ' வென்று நள்ளிரவிற்
கொட்டும், உடன் கூடும்
கொலைக்காற்றும் தானுமாய்
எட்டுத் திசையும் நடுங்க முழங்கி எழும்.
ஆட்டத்து மங்கையர் போல்
அங்கு மொய்த்துநின்ற பயிர்
பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழாகிப்
போய்விடவே
கொள்ளைபோல் வந்து கொடுமை
விளைவித்து
வெள்ளம் வயலை விழுங்கிற்று.

பின்னர் அது
வற்றியதும், ஓயா வலக்கரத்தில்
மண்வெட்டி
பற்றி, அதோ பார், பழையபடி
கிண்டுகிறான்,
சேர்த்தவற்றை
முற்றும் சிதறவைக்கும் வானத்தைப்
பார்த்தயர்ந்து நிற்கும் பழக்கமற்றோன்
வாழி, அவன்
ஈண்டு முதலில் இருந்தும் முன்னேறுதற்கு
மீண்டும் தொடங்கும் மிடுக்கு! -1957

ஈழத்து நவீன கவிதையின் முன்னோடிகளான மும்மூர்த்திகளில் ஒருவர் து. உருத்திரமூர்த்தி என்ற இயற்பெயரை உடைய மஹாகவி. தன் கவிதைகளின்மீதான நம்பிக்கை தன்னை மஹாகவி என்ற பெயருள் ஆக்கிக்கொள்ள வழிசமைத்தது. மாபாடி, பண்டிதன், புதுக்கம்பன் என்ற புனைபெயர்களிலும் எழுதியிருந்தார். 'நவீன வடிவங்களான சிறுகதை நாவல் ஆகியன நவீன உரிப்பொருளைக் கையாண்டவேளை கவிதை மட்டும் பழைய பொருள்மரபைப் பற்றியே சுழன்றமையால் அருகிவரும் கலை எனக் கருதுமாறாயிற்று. நிகழ்காலச் செய்திகளையும் பிரச்சனைகளையும் கவிதையில் ஆண்டு அதனை இன்றைய யுகத்துக்கு இழுத்துவரல் அவசியமாகும்' என்ற பிரக்ஞை உடையவராய் கவிதை, காப்பியம், பாநாடகம், குறும்பா என்று பல வடிவங்களுக்குள்ளால் தன் எழுத்தாளுமையைப் பதிவுசெய்தவராக இவர் விளங்கினார். இவரது படைப்புகள் வள்ளி, கணமணியாள் காதை, வீடும் வெளியும், குறும்பா, கோடை, மஹாகவி கவிதைகள், மஹாகவியின் ஆறு காவியங்கள் எனப் பல நூல்களாக வெளிவந்துள்ளன. இவரது கவிதைகளில் பேசப்படும் முக்கிய கவிதையே 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு'.



நிலத்தோடும் வாழ்வோடும் இயற்கையோடும் போராடும் ஒரு விவசாயியின் உணர்வை, கதையை, வீழ்ந்தாலும் வீழாத விடா முயற்சியை தன் செட்டான மொழியாலும் கவித்துவத்தாலும் மனதில் நம்பிக்கையோடு உள்ளோடவைக்கும் கவிதையாக இது விளங்குகின்றது. இக்கவிதை மனதில் சேகரமாகும்போது விவசாயி மட்டுமல்ல, எல்லோர் வாழ்விலும் நம்பிக்கையுடன் மிளிரவேண்டிய மிடுக்கை இக்கவிதை அனுபவம் விரிப்பதை உணரலாம்.

'இன்னல் உழைப்பு ஏழ்மை உயர்வு இவற்றைப் பாடுங்கள்' என்று பிரகடனப் படுத்திய கவிஞனின் கவிதையும், கருத்தியலைப் பிணைத்துப் பயணம் செய்திருக்கின்றது. பெருமிதம், வியப்பு, மகிழ்ச்சி, அவலம், நம்பிக்கை என்று பல்வேறு உணர்வுகளிலும் காட்சிகளிலும் கட்டி இணைத்து, பேச்சோசையுடனும் அது சேரும் கவியோசையுடனும் மனதில் இறங்கும் மொழியில் ஆக்கப்பட்டுள்ளது. இவர் கையாளுகின்ற உவமைகளும், வரிகளும் காட்சிப்படிமத்தை இலகுவில் உருவாக்கி விடுகின்றன. வாழ்வியலை உணர்வுபூர்வமாக விரிக்கும் அழகு தடங்கலற்று இங்கு நிறைவேறிவிடுகின்றது.

'பொற்காசாம் நெல்லுப் பொதி சுமந்து கூத்தாடுவதை' – 'தங்க நகைகள் தலைக் கணிந்த பெண்களே கூடிக்குனிந்து கும்மி கொட்டுவதாய்' காட்சிப்படிமமாக்கி உவமிக் கின்றபோது, கவிஞனின் ஆளுமை பளிச்சிடு கின்றது. அந்த உழைப்பின் பெறுபேறு மழையால் அழியும் அவலத்தை ஆட்டத்து மங்கையரின் நிலைக்கும், கொள்ளை நோயின் கொடூர காவுகொள்ளலுக்கும் உவமிக்கும்போது, அந்த அழிவும் அவலமும் எம் நெஞ்சில் கீறுகின்றது. இந்தக் காட்சிகளில் எம்மை ஆட்கொள்ளவைத்து எம்மையும் தம்மோடு நெருக்கி, 'அதோ பார்' என்று அந்த அனுபவத்தில் – திகைப்பில் எம்மையும் திளைக்கவைக்கும் கம்பீரம் இக்கவிஞனின் வரமாக உள்ளது.

முடியாததில் முயற்சி செய்து விளைவு கண்டு மகிழ்ச்சியும் கிறுகிறுப்பும் அடைந்து, பிறகு பயிர் பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழாகிப்போய், வெள்ளம் வயலை விழுங்கிய போதிலும் அயர்ந்து நிற்கும் பழக்கமற்ற விவசாயி முன்னேறுதற்காய், பழையபடி மண்வெட்டி யைத் தூக்கும் மிடுக்கு, ஒரு போராளியாய் அவனை நெஞ்சில் உயர்த்துகின்றது. வீழ்த்தப்படும் எல்லா மாந்தர்களுக்குமான ஓர் ஊக்க மருந்தாய் இக்கவிதை இனிப்பதை, நாம் ஏற்றுக்கொள்ளவே வேண்டும். ⊘

---

(பக்.5 ➔) அதன் பின் இஷான், நிகும்புடன் நட்பாகிவிடுகிறான். இஷானுக்கு நம்பிக்கை, ஒளிக்கீற்றாகச் சுடர்விடுகிறது. தாழ்வு மனப்பான்மை மெல்லமெல்லப் போகின்றது. நிகும்ப் தலைமை ஆசிரியரின் அனுமதியைப் பெற்று, எல்லாப் பாடங்களையும் அவனுக்குத் தனியே கற்பிக்கிறார். அவனால் இப்பொழுது வாசிக்க, எழுத ஓரளவு முடிகின்றது. ஒருகட்டத்தில் முழுவதுமாக முன்னேறிவிடுகின்றான்.

பாடசாலையில் ஆசிரியர்கள், மாணவர் கள் கலந்துகொள்ளும் திறந்த ஓவியப் போட்டி ஒன்றை நடத்துகிறார் நிகும்ப்; அதில் இஷானுக்கு முதலிடம் கிடைக்கிறது. பாடசாலையின் ஆண்டு இதழின் முகப்பு அட்டையில், அவன் வரைந்த படம் அச்சாகின்றது. விடுமுறைக்காக அவனைத் தம்முடன் அழைத்துச் செல்ல வந்த அவனின் பெற்றோர், அவனைப் பற்றி ஆசிரியர்கள் பெருமையாகப் பேச மிகுந்த ஆச்சரியப் படுகின்றனர். மீண்டும் இஷானை அழைத்துச் செல்ல முற்பட, அவனோ மறுத்துத் திரும்பி நிகும்பிடம் ஓடிவர, அவர் அவனைத் தூக்கிக் கொள்ள, நெகிழ்ச்சியாகப் படம் முடிகின்றது.

இஷான் பாத்திரத்தில் நடித்த சிறுவனின் நடிப்பு பிரமிக்கவைக்கும் ; ஒவ்வொரு முகபாவனை யும், தத்தளிக்கும் உணர்ச்சிகளும் மிகச்சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும்.

வர்த்தக ரீதியான படங்களில், மிக வித்தியாசமான முயற்சிகளைத் தொடர்ந்தும் செய்து வருபவர் அமீர்கான். அவரது இயக்கத்தில் வெளியான முதலாவது படம் இது. அவருக்குள் உறங்கிக்கொண்டிருந்த இன்னொரு புதிய ஆளுமை பிரமிக்க வைக்கிறது. புதிய கதைக்களம், சலிப்புத் தட்டாத – தொய்வில்லாத, நெகிழ்ச்சியான திரைக்கதை. முதல் முயற்சியிலேயே மிகச் சிறந்த திரைப்படம் ஒன்றினைத் தந்துள்ளார். தான் இயக்கிய படத்தில், தனக்கு மிகச்சாதாரணமான பாத்திரத்தினை ஒதுக்கி, ஒரு சிறுவனுக்கு முக்கிய பாத்திரம் கொடுத்து அசத்தியுள்ளார். தமிழ் சினிமாவில் இப்படியான அற்புதங்கள் நடப்பதற்கான சாத்தியப்பாடு, மிகக் குறைவு! ⊘

# ஓட்டமாவடி அரபாத்தின் மூத்தம்மா சிறுகதை ....



கிழக்கிலங்கை மட்டக்களப்பு ஓட்டமாவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் அரபாத். இவர் இன்றைய எழுத்தாளர்களில் மிகவும் முக்கியமானவர். சிறுகதை, கவிதை போன்றவற்றிலும் கலை, இலக்கியம், சமயம் சார் பத்தி எழுத்து முயற்சிகளிலும் இவர் ஈடுபட்டு வருகிறார். **எரிநெருப்பிலிருந்து, வேட்டைக்குப் பின், நினைந்தழுதல், ஆண்மரம், உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி** முதலான ஆக்க இலக்கியத் தொகுப்புக்கள் பலவற்றை இவர் எழுதியுள்ளார். இவரது சிறுகதைகளில் சில, ஆங்கிலம் உட்பட வேறு மொழிகளில் மொழிபெயர்க் கப்பட்டுள்ளன.

இதில் நினைந்தழுதல் எனும் தொகுப்பில் இடம்பெறும் சிறுகதையே **மூத்தம்மா** என்பதாகும். இக் கதையூடாக மூத்தம்மா என்ற இவரது பாட்டியாகிய முதிய உறவுக்கும் இவருக்குமான பாச நெருக்கத்தையும், பின்னர் அவர் இறந்த போது அறியா வயதில் இவருக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் மூத்தம்மா குறித்தான ஒரு நினைவு மீட்டலாக வெளிப்படுத்தியுள்ளமை சிறப்பிற்குரியது. இங்கு காசீம் என்னும் பாத்திரம் கதாசிரியராகவே விளங்குகின்றார். "தயிர்ச் சட்டியின் வடிவத்தில் வானில் கிடந்தது நிலா. கொட்டிவைத்த இடத்தில் சற்று நேரம் இசகாமல் பிசகாமல் உறைந்திருக்கும் எருமைத் தயிரைப் போல் ஆடாமல் இருந்தது அதன் வடிவம்...." எனத் தொடரும் காட்சி வர்ணனையூடாகவே இக்கதை தொடங்குகிறது. அதைத் தொடர்ந்து கதையின் களத்தை ஆசிரியர் விபரித்துச் சொல்கிறார். பின்னர் மஞ்சோனா மரத்தில் பக்குல் கத்தியது என ஆந்தை கத்துவதைக் கூறிப் பின்னர், 'ஏன்கா ராவையில மட்டும் பக்குல் கத்துது?' என்ற கேள்வியிலும், அதற்கு மூத்தம்மா, "அது மனெ நம்மட ஊருக்க குடும்பத்துக்க ஆராவது மவுத்தாப் போறதுக்கு அடையாளம் எண்டு சொல்லுவாக, அதுதான் இந்தப் பக்குல் வாசலுக்கு வாசல் கேவித் திரியுதாம்" என்று கூறிய விளக்கத்தினூடாக, இஸ்லாமிய பேச்சு வழக்கும் கிராமிய நம்பிக்கையும் சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

பக்குலை(ஆந்தை) விரட்ட சிரட்டையில் நெருப்புத்தணலை நிரப்பி அதன்மேல் உப்புக்கட்டியைப் போட்டு வெடிக்கச்செய்தல், குழந்தைப் பேற்றினை வீட்டிலேயே வைத்துக் கொள்ளல், பலதார மணம், சந்தூக்கில் பிரேதம் எடுத்துச் செல்லல் போன்றவற்றினூடாக ஒரு கிராமிய வாழ்வியல் சித்திரிப்பை மண்வாசனையுடன் கதாசிரியர் வெளிப்படுத்தியுள்ளமை சிறப்பிற்குரியதாகும். இவை கிராமிய நம்பிக்கைகளையும் வெளிப்படுத்துகின்றன. "அப்ப ஏன்கா நம்மட உம்மா மவுத்தாப் போன அண்டெக்கி இது கத்தல்ல. கத்தியிருந்தா நம்மட உம்மாவ ஆட்டுக்க ஒளிச்சு வச்சிருக் கலாம் என்னகா?" என்ற காசிமின் குழந்தை உலக விளக்கல்கள் எடுத்துக்காட்டப்பட்டு, உம்மா இறந்துபோக வாப்பா புதியதொரு உம்மாவை கூட்டிவர, மூத்தம்மா அதற்குச் சம்மதிக்க மறுக்க தன் பிள்ளைகளை மூத்தம்மாவிடமே விட்டுச்சென்றமை, சிறு வயது முதலே அவர்களை ஓர் உம்மாவைப் போல மூத்தம்மாவே வளர்த்தமை, மூத்த வாப்பாவின் மாட்டுவண்டில் உலக சித்திரிப்பு என்பன இக் கதையின் முற்பகுதியில் சிறப்பாக சித்திரிக்கப் பட்டுள்ளன. இவற்றினூடாக சில கிழக்கிலங்கை, இஸ்லாமிய சமூகக் கிளைமொழிச் சொற்களான கட்டுக்கரத்தை, மறுகா, மையம், சந்தூக்கு, வட்டுவம் போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளதன்மை சிறப்பிற்குரியது.

இக்கதையானது மூத்தம்மா குறித்த நினைவுகளில் மெதுவாகத் தொடங்கி எம்மையும் கூடவே அழைத்துச் சென்று, இறுதியில் அவவின் மரணம் தரும் உச்சக்கட்ட உணர்வோடு நிறைவடைகின்றமை சிறப்பிற் குரியது. கதாசிரியரே கதை சொல்லும் உத்தி இங்கு பெருமளவு கையாளப்பட்டுள்ளது. வாழ்வியல் கோலச் சித்திரிப்பும், உறவுப் பாசமும், இஸ்லாமிய பேச்சுவழக்கும் இக் கதைக்குப் பலம் சேர்க்கின்றன. கதையின் முற் பகுதியில் மூத்தம்மா குறித்த ஓர் உயர்வான மனப்பதிவை அவரது குணப் பண்புகளை விளக்குவதற்கூடாக கதாசிரியர் எம்மிடம் ஏற்படுத்த முனைகிறார். இந்த வகையில் இக் கதையில் மூத்தம்மாவின் குணவியல்புகளாக - பாத்திரச் சித்திரிப்பாக அவர் செய்யும் வீட்டு வேலைகள், நோயற்ற வாழ்வு, உதவும் பண்பு போன்றவற்றைக் குறிப்பிட முடியும். 'இந்தக் கிராமத்தின் முடிசூடா குட்டி ராணியாக பொது மனுசியாய் மூத்தம்மா இருந்தா......' என்பதன் ஊடாக பாத்திரச் சித்திரிப்பை மேனிலைப் படுத்தியுள்ளார்.

**"எரிநெருப்பிலிருந்து, வேட்டைக்குப் பின், நினைந்தழுதல், ஆண்மரம், உடைந்த கண்ணாடிகளில் மறைந் திருக்கும் குருவி முதலான ஆக்க இலக்கியத் தொகுப்புக்கள் பலவற்றை இவர் எழுதியுள்ளார். இவரது சிறுகதைகளில் சில, ஆங்கிலம் உட்பட வேற்று மொழிகளில் மொழிபெயர்க் கப்பட்டுள்ளன."**

கதையில் இரண்டு இடங்களில் அணிகள் கையாளப்பட்டுள்ளன. ஒன்று எண்ணெய் வைக்காத மூத்த வாப்பாவின் தலையைப் பார்த்து "அங்கபாரு மனெ உண்ட மூத்த வாப்பா தலய. சூப்பின பனங் கொட்ட மாதிரி" எனக் கூறியதில் உவமையணி அற்புதமாக கையாளப் பட்டுள்ளது. இதேபோல மூத்தம்மாவை குறிக்கும் உருவகமாக 'வெள்ளைக் கொக்கு' என்ற தொடரும் இங்கு கையாளப்பட்டுள்ளது.

கதையின் இறுதிப்பகுதிகள் வாசகராகிய எம்மையும் கண்கலங்க வைப்பன. தேர்ந்த ஒரு கதைசொல்லியால்தான் இது சாத்திய மாகும். ஓட்டமாவடி அரபாத் அதனை இங்கு நிரூபித்துள்ளார். பள்ளிக்கூடத்தில் இருந்து வீட்டுக்கு அழைத்துப் போனதும், வெள்ளைச் சேட்டில் போட்ட மறுவை மறைத்துக் கொண்டு போனதும், றகுமா மாமி ஓடிவந்து புத்தகங்ளை வாங்கிக் கொள்ள, தங்கச்சி விரல் சூப்பிக்கொண்டு அங்குமிங்கும் திரிந்ததும் என மரணம் அறியா வயதின் கோலங்களைக் காட்டி, இறுதியில் றகுமா மாமி மூத்தம்மாவை பாத்திட்டு வருவம் எண்டு உள்ளே அழைத்துப் போனபோது, 'என் வெள்ளைக் கொக்கு தூங்கிக் கொண்டிருந்தது. ஓடிப்போய் அவவின் கால்களைக்கட்டிக் கொண்டேன். இஞ்சாலை வா மகன் மையத்தை தூக்கப் போறாக' எனும் வரிகள், நெஞ்சை உருக்கும் பகுதிகள் ஆகும். இறுதியில் 'சந்தூக்கின் பின்னால் ஓடிச்சென்றேன். மனெ நீ வெயிலுக்க வராம தங்கச்சிய பாத்துக்க....' என்ற மூத்தம்மாவின் வார்த்தைகள் காதில் ஒலிக்க, சுருக்கென்று நின்றதையும் கூறி, 'நெஞ்சு வலித்தது. இளவரசனான நான் குலுங்கிக் குலுங்கி அழுகின்றேன். என்னைத் திரும்பிப் பார்க்காமல் மூத்தம்மா போய்க் கொண்டிருந்தா' எனக் கதையை முடிக்கும் போது, கதாசிரியரோடு சேர்ந்து நாமும் அழுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. ஒரு சிறந்த கதையை வாசித்து முடித்த அனுபவமும், மூத்தம்மா என்ற ஓர் உறவு குறித்த ஏக்கமும் எம்முள் மிஞ்சுகிறது.

**புலோலியூர் வேல்நந்தகுமார்**

# குலாத்தி

## -கிஷோர் சாந்தாபாய் காலேயின் சுயசரிதை



தலித் இலக்கியம் இந்தியாவின் மஹாராஷ்டிரா, குஜராத் மற்றும் கர்நாடக மாநிலங்களில் தடம் பதித்துள்ளது. மராத்தி தலித் படைப்புக்களில் 'அந்நியன்', 'பழிக்கப் பட்டவன்', 'குலாத்தி' ஆகியவை அதிகம் பேசப்பட்ட நூல்கள்.

இவற்றுள் 'குலாத்தியாச்சே போர்' (தமிழில் : குலாத்தி – தந்தையற்றவன்) என்பது, முன்பின் தெரியாத ஓர் இளைஞனின் கதை. குலாத்தி என்ற சமூகத்தைச் சேர்ந்த தமாஷா நடனப் பெண்ணுக்கு முறைதவறிப் பிறந்த ஒரு பையனின் கதை.

இந்த நடனப் பெண்களின் துயரங்களை வெளியுலகிற்குக் காட்டவே தாம் இதை எழுதியதாகச் சொல்கிறார், கிஷோர் சாந்தாபாய் காலே. தமாஷா ஆடிப்பிழைக்கும் ஐந்து சகோதரிகளுள் மூத்தவள்தான் சாந்தாபாய் – இந் நூலாசிரியரின் தாய். அவள் 14 வயதில் பெற்ற பிள்ளைதான் கிஷோர். தந்தையின் பெயர் தெரியாததால் அவன் சந்திக்கும் இகழ்ச்சியும் புறக்கணிப்பும் தடைகளும் சோதனைகளும் சரிதை முழுவதும் விரவிக் கிடக்கின்றன. அத்தனை பின்னடைவு களையும் தகர்த்து முன்னேறிய ஒரு சாதனையாளரின் கதைதான் குலாத்தி.

தன் குடியை உயர்த்துவேன் என்று முனைபவனுக்கு தெய்வம் கொடுக்குக்கட்டிக் கொண்டு முன்னே நடக்கும் என்பார் திருவள்ளுவர் (குறள்: 1023). ஆனால் கிஷோருக்கு தெய்வம் உதவாத சந்தர்ப்பங் களும் நேர்ந்தன. தன் கல்வி முயற்சி எங்கே நிறைவேறாது தேங்கிவிடுமோ என்று அவர் இடிந்து போய் உட்கார்ந்த சந்தர்ப்பங்கள் பல.

குலாத்திச் சமூகம் ஒரு ராஜஸ்தானத்துப் பழங்குடிச் சமூகம். கழைக்கூத்தாடிகளான இவர்கள் மேற்கு மஹாராஷ்டிராவுக்கு குடிபெயர்ந்த பின், மிகக் கவர்ச்சியான தொழிலான நடனத்துக்கு மாறிவிட்டனர். பெண்களுக்கு இசையிலும் நடனத்திலும் பயிற்சி அளிக்கப்பட்டு, ஆண்களைக் கவர்ந்து களிப்பூட்டி சம்பாதிக்க ஆற்றுப்படுத்தப்பட்டனர். தங்கள் சகோதரிகளையும் மகள்களையும் இதில் ஈடுபடுத்திவிட்டு, ஆண்கள் எத்தொழிலும் செய்யாமல் சோம்பேறிகளாய் குடித்து வெறித்து காலம் கழிப்பர்.

குலாத்திப் பெண்கள் கன்னிகளாக இருக்கும் பொழுதே விற்கப்படுவர். அதன் பின் கர்ப்பமடைந்தால் கைவிடப்படுவர். ஆக குலாத்திக் குழந்தைகள், தம் பெயருக்குப் பின்னே தாயின் பெயரையே வைத்திருப்பர். இதனால் பள்ளியிலும் சமூகத்திலும் கேலிக்கும் புறக்கணிப்பிற்கும் ஆளாவர்.

இந்தப் பெண்கள் நடனமாடுவதைப் பார்க்க வந்திருக்கும் ஆண்கள் இவர்களை நோக்கி பணத்தை வீசுவர். அதைப் போய் நன்றியோடு பெற்றுக்கொண்டு ஆடவேண்டும். கைக்குழந்தைக்காரி பாலூட்டிக்கொண்டு இருப்பாள். மணியடித்தால் பாலூட்டுவதை நிறுத்திவிட்டு அரங்குக்கு போய், 45 நிமிடம் வரை ஆடவேண்டும். சில ஆண்கள் இப்பெண்களை வைப்பாட்டிகளாக வரும்படி அழைப்பர். அவ்வாண்கள் மணமானவர்களாக இருப்பர். ஆரம்பக் கவர்ச்சிபோக அல்லது பெண்கள் கருவுற்றால் அவர்கள் கைவிட்டு விடுவர்.

கிஷோருடைய பாட்டி ஜீஜீ நெசவாளர் சாதியைச் சேர்ந்தவள். தந்தையை இழந்த

பிடித்த புத்தகம்



அவளும் அவள் சகோதரன் கங்காராமும் குலாத்திச் சமூகத்தின் தொழிலைக் கற்றுக் கொண்டனர். கங்காராம் டோலக் அடிப்பான், ஜீஜீ நடனமாடுவாள். இவளை அரங்கில் கண்டு மயங்கிய மாதவ்ராவ் பட்டேல் என்ற நிலப்பிரபு, அவளை மூன்றாம் மனைவியாக்கிக் கொண்டார். ஜீஜீயை அவர் மிக நல்லாகவே நடத்தினார். குருஸ்னா குலாத்தியின் குடும்பத்தையும் அவரே வழிநடத்தினார். ஆனால் மாதவராவ் திடீரென்று இறந்து விடவே ஐந்து பெண்களையும் மூன்று ஆண்பிள்ளை களையும் கொண்ட குடும்பம் ஆதரவற்றுப் போனது. ஜீஜீ விதவையாகி தன் செல்வாக்கை இழந்தாள். அவளுடைய தம்பி கோண்டிபா அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டான். ஆசிரியையாக ஆசைப்பட்ட சாந்தாவை (கிஷோரின் தாய்) நடனப் பயிற்சிக்கு அனுப்பினான். தொடர்ந்து அவள் தங்கையர் ஷாலன், சுசீலா, ரம்பா, பேபி, ஆகியோர் நடனக்குழுவில் சேரவேண்டியதாயிற்று.

நாமதேவ்ராவ் என்ற சட்டமன்ற உறுப்பினர் – வாக்குக் கோரி வந்தவர் – சாந்தாவை விரும்பினார். கேட்கும் பணத்தை கொடுக்கத் தயாராக இருந்தார். கோண்டிபா ஒரு நிபந்தனை விதித்தான். சாந்தா தன் வீட்டிலேயே இருக்க வேண்டும் என்றான். 'சிரா உட்டர்ன' என்ற சடங்கின்மூலம் சாந்தா நாமதேவுக்கு மனைவியானாள். கர்ப்பந்தரித்தாள். அந்த வேளையிலும் நடனமாட வேண்டியிருந்தது.

கிஷோர் பிறந்து இரண்டு மாதமானதும் அவனை ஜீஜீயிடம் ஒப்படைத்துவிட்டு, சாந்தா தமாஷா குழுவோடு நடனமாடத் தொடங்கினாள். இந்த வாழ்க்கையை நினைத்து சலித்துப் போய் இருந்த சாந்தாவை, நானா என்ற ரசிகன் விரும்பினான். சாந்தாவும் விடுதலையை நாடினாள். ஆனால் தங்க முட்டையிடும் வாத்தை கோண்டிபா விடமாட்டானே! காதலர்கள் ஓடிவிட்டனர்.

கிஷோர் தாயால் கைவிடப்பட்டான். தாயன்புக்காக காலமெல்லாம் ஏங்கிக் கண்ணீர் சிந்தினான், ஒரு பாவமும் அறியாத பாலகன். ஜீஜீயே அவனைக் காத்துவந்தாள். கோண்டிபா, பொப்பட் மாமா முதலிய ஆண்கள் அவனிடம் வேலை வாங்கினர். வயற்காட்டுக்கும் மாவரைக்கும் மில்லுக்கும் இருளிலும் மழையிலும் அனுப்பி வாட்டி எடுத்தார்கள்.

ஆனால் மௌஷிகள் (சிறியதாயர்) எல்லோரும் இவன் மேல் அன்பாய் இருந்தார்கள் ( அவர்களுடைய வாழ்க்கையும் நரகமாய்த்தான் இருந்தது). சுசீலா மௌஷியும் பேபி மௌஷியும் கிஷோர் மீது உயிரையே வைத்திருந்தனர். பரீட்சை எழுதப் பணமின்றி விரக்தியுற்று இருந்த கிஷோருக்கு, தன் உடலை விற்றுப் பணம் கொடுத்தாள் ஒருத்தி.

எல்லாத் தடைகளையும் தாண்டி, கிஷோர் டொக்ரரானான். தன்னை ஆளாக்கிய பாட்டி ஜீஜீயின் நினைவாக, தாராபாய் மெமோறியல் சன்ஸ்தாவை நிறுவினான். குலாத்திக் குழந்தைகளின் கல்விக்கு இவ்வறக்கட்டளை உதவியது.

ஆதிவாசிகள் பாரம்பரிய வைத்திய முறைகளில் நம்பிக்கை உடையோராய் இருப்பதுகண்டு, ஆயுர்வேதம் மற்றும் அக்கியூப்பங்ஷர் கற்றார். அரசாங்க சுகாதார சேவைகள் மீது நம்பிக்கை இழந்து தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு, மக்களிடையே வாழ்ந்து பணியாற்றத் தொடங்கினார். இளைஞர்களுக்காக க்ரீடா கேந்திரா ( உள்ளக விளையாட்டுக்கள் மையம்) நிறுவினார். பெண்களுக்காக மகிளா மண்டலைத் தொடங்கினார். மருத்துவம் படித்தவர்கள் நகரங்களை நோக்கி ஓடிக்கொண்டிருக்க, டொக்ரர் காலே மூங்கிற் சுவர்மேல் மண்ணும் சாணமும் அப்பிய – வைக்கோலால் வேயப்பட்ட – குடிசையில் இருந்து மருத்துவம் செய்யலானார்.


தன்னால் கைவிடப்பட்ட இந்த மகன் அடைந்த முன்னேற்றத்தை சாந்தாபாய் காண்கிறாள். ஆம், டொகரர் கிஷோர் நீண்ட நெடிய தூரத்தைக் கடந்து வந்திருக்கிறார்.

சோ. பத்மநாதன்

# படிப்பகம்





**ஆதிரை - சயந்தன், பக். 664, விலை (இந்திய) 580/=, தமிழினி, 769 அண்ணா சாலை, சென்னை - 2,**

'தமிழர் வரலாற்றில் மாபெரும் விடுதலைப் போராட்டக் களத்தில் இருந்த தாய்மார்கள், பிள்ளைகளின் வாழ்க்கைச் சித்திரம் இது; தமிழன்னையின் கண்ணீர்த் துளி.' என்னும் குறிப்புடன் வந்துள்ள நாவல்.

**சின்னத்துரையின் சிறிய உலகம் - சிங்களத்தில் குணசிறி ஜயவர்தன; தமிழில் ரவி ரத்னவேல், பக்: 258+vi, விலை குறிப்பிடப் படவில்லை, இனங்களுக்கிடையில் நல்லுறவை வளர்க்கும் நிகழ்ச்சித் திட்டம், கொழும்புப் பல்கலைக் கழகம்.**

1993 இல், பண்பாட்டுத் திணைக்களத்தின் விருதைப் பெற்ற நாவல்.

**கறுத்தக் கொழும்பான் - ஆசி கந்தராஜா, பக் : 224, விலை குறிப்பிடப்படவில்லை, மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ், 20/2, ஜக்கரியா காலனி, முதல் தெரு, சூளைமேடு, சென்னை - 94**

"படைப்புக் கட்டுரை என்னும் இலக்கிய வகையைப் பிறிதொரு பரிமாணத்திற்கு வளர்க்கக் 'கறுத்தக் கொழும்பான்' என்னும் இந்நூல் முயன்று வெற்றியும் சாதிக்கிறது: " என்கிறார் எஸ். பொ.

**யாழிசை - சிவ. ஆரூரன், பக். 400 + vi, 500/=, ஆ.சிவலிங்கம், நிலாவில், அல்வாய் வடமேற்கு, அல்வாய்.**

தனது வாசக ஞானத்தையும் அனுபவ ஞானத்தையும் இணைத்து இந்நாவலைப் புனைந்துள்ளதாகக் கூறுகிறார் ஆசிரியர்.

**அருமையான ஆளுமைகளும் சுவையான மதிப்புரைகளும் - கே. எஸ். சிவகுமாரன், பக். 112+v, விலை (இந்திய) 60/=, மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 17**

பொது, முன்னுரைகள், ஆளுமைகள், மதிப்புரைகள் ஆகிய பிரிவுகளில் 26 கட்டுரைகள்.

**சிங்கள நாடகக் கலை ஆளுமைகள் (முதலாம் பாகம்) - சாமிநாதன் விமல், பராக்கிரம நிரியெல்ல, பக். 266, விலை 450/= , மக்கள் களரி, 238+ V, ராஜகிரிய வீதி, ராஜகிரிய.**

"சிங்கள அரங்கின் ஆழத்தையும் அகலத்தையும் காட்டும் நூல்" என்கிறார், நாடகமும் அரங்கியலும் விரிவுரையாளர் க. ரதிதரன்.

**யாழ்ப்பாணக் கூத்துக்கள் - டேமியன் சூரி, பக். 74, விலை 200/=, இளைஞர் கலைக்கழகம், குருநகர்.**

மனிதருள் மாணிக்கம், விணைக்கொடியோன், தர்மத் தூதுவன், திருந்திய உள்ளம், செங்கோல் ஆகிய ஐந்து கூத்துக்கள்.

**கீதையடி நீயெனக்கு...- ஆசி. கந்தராஜா, பக். 212, விலை (இந்திய) 150/= , மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ், சூளைமேடு, சென்னை - 94**

குறுநாவல் தொகுப்பு. "கந்தராஜா எழுப்பும் கேள்விகள் உங்கள் மனச்சாட்சியைத் தட்டிப் பார்க்கும்." என்கிறார், தனது முகவுரையில் எழுத்தாளர் மாலன்.

**பாலித்தீவு - கானா பிரபா, பக்.106, விலை (இந்திய) 200/=, மடத்துவாசல் பிள்ளையாரடி.**

"பாலிக்குப் போக எத்தனை பேரால் முடியும்? வாசிப்பின் வழி வாழ்ந்துவிட்டு வரலாமே?" என்கிறார், முன்னுரையில் பாரா.

**துளிக்காற்று - தொகுப்பு: ந. மயூரரூபன், த. அஜந்தகுமார், பக். 64+xi, விலை குறிப்பிடப் படவில்லை, கலாசாரப் பேரவை, பிரதேசச் செயலகம், வடமராட்சி தெற்கு மேற்கு, கரவெட்டி.**

பிரதேசச் செயலக கவிதைப் பயிலமர்வில் பங்குபற்றிய பயிலுநரின் கவிதைகள். ⊘









(பக்.2 →)

இராமதாஸ், நீடாமங்கலம் சண்முகவடிவேல் முதலிய வித்துவான்களோடு வாசித்து அவர்களின் மதிப்பையும், ரசிகர்களின் கரகோஷத்தையும் பெற்றார்.

தெட்சணாமூர்த்தியின் வித்துவத்தால் ஈர்க்கப்பட்ட தவில் வித்துவ சிரோன்மணி சண்முகவடிவேல், அவரைத் தமிழ்நாட்டிற்கு அழைத்துச் சென்று, காருகுறிச்சி அருணாசலத்திற்கு இசைவிழாவில் வாசிக்க ஏற்பாடு செய்தார். அவ்விழாவில் சண்முகவடிவேல், அவரின் மாமன் இராகவப்பிள்ளை, தெட்சணாமூர்த்தி ஆகியோர் தவில் வாசித்தனர்.

அன்று தொடக்கம் காருகுறிச்சியார், விஷேட கச்சேரிகளுக்குத் தெட்சணாமூர்த்தியையே அழைத்து வந்தார். அவரின் மேதைமையால் ஷேக் சின்னமௌலானா, நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், சேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்கள், பல்லவி நடராஜசுந்தரம் முதலிய புகழ்பூத்த வித்துவான்கள் தெட்சணாமூர்த்தியைத் தமது கச்சேரிகளுக்கு அழைத்து வந்தனர். நாதஸ்வரச் சக்கரவர்த்தி இராஜரத்தினம் பிள்ளைக்கும் அவர் தவில் வாசித்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் தெட்சணாமூர்த்தியின் தவில் வாசிப்பு பெரிய கலைஞர்களையெல்லாம் வியப்பில் ஆழ்த்தியது. அவரின் மூளை கற்பூரமூளை என்றும், கம்பியூட்டர் மூளை என்றும் புகழ்ந்தார்கள். கேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்கள் கரவெட்டியில் கச்சேரி செய்வதற்காகத் தெட்சணாமூர்த்தியின் இல்லத்தில் வந்திருந்த போது, நான் அவர்களைப் பேட்டி காண்பதற்காக மகாலிங்கத்துடன் சென்றேன்.

தெட்சணாமூர்த்தி மிக்க அன்போடு என்னுடன் பேசினார். அவரைக் கர்வம் கொண்டவர் என்றும், கோபக்காரர் என்றும் சிலர் பேசக் கேட்டிருக்கிறேன். அதெல்லாம் அவர் தனது வித்துவத்திற்குக் கொடுக்கும் மிடுக்கு என்றே நான் நினைக்கிறேன். "தெட்சணாமூர்த்தியின் தவில் வாசிப்பை முதன்முதலில் கேட்டபோது உங்கள் மனதில் என்னபட்டது?" என்று சேதுராமனிடம் கேட்டேன். " என்னிலம் பெரிய வியப்பு ஏற்பட்டு மேனி சிலிர்த்தது. இவர் பெரிய மேதை என்று தீர்மானித்தேன்" என்றார். அப்பேட்டி ஈழநாட்டில் வெளிவந்தது.

தமிழ்நாட்டில் மிருதங்க வாசிப்பில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த, மிகவும் கண்டிப்பான பேர்வழியான பாலக்காடு மணி ஐயர், தெட்சணாமூர்த்தியின் தவில் வாசிப்பை முதன்முதலாகக் கேட்டபோது, "எட்டாவது அதிசயம்" என்று வியந்திருக்கிறார்! கடுங்கண்டனக்காரரான இசை விமர்சகர் சுப்புடு, தெட்சணாமூர்த்தியின் தவில் வாசிப்பை, "மேதைமையின் எல்லை" (Virtuosity at its highest) என்று எழுதியுள்ளார். தெட்சணாமூர்த்தி 15.05.1975 இல் நாதப் பிரம்மத்துடன் கலந்தார் அவரைத் தமிழ் இசை உலகம் மறந்து விட்டதே, அவரின் வித்துவம் செறிந்த தவிலின் லய நாதம் காற்றில் கலந்து அழிந்துவிட்டதே என்று நான் கவலைப்பட்டதுண்டு.

அளவெட்டி மைந்தர்கள் சிலரின் முயற்சியால், "தவில் மேதை தெட்சணாமூர்த்தி அமையம்" நிறுவப்பட்டு - அவர் வாசித்த தனி ஆவர்த்தனம், காருகுறிச்சி போன்ற வித்துவான்க ளோடு வாசித்த கச்சேரிகள் முதலிய பதிவுகளைப் பல இடங்களில் தேடியெடுத்து, இசைத்தொகுப்பாகவும் ஆவணப் படமாகவும் பதிவுசெய்து விழாவெடுத்து நல்லூரில் வெளியிட்டமை, என்மனதில் தேன்மாரி பொழிந்தது போல் இருந்தது.

இலங்கை அரச சிங்களக் கலைஞர்கள்-நடனக் கலைஞர்கள், சினிமாக் கலைஞர்கள் முதலியோருக்கு முத்திரை வெளியிட்டுக் கௌரவித்துள்ளது. "உலகின் எட்டாவது அதிசயம்" என்று போற்றப்படும் தவில் மேதை தெட்சணா மூர்த்திக்கு முத்திரை வெளியிட, தெட்சணாமூர்த்தி அமையம் முயற்சி எடுக்க வேண்டும் என்பது என் பணிவான வேண்டுகோள். ⊘




# தமிழ் சினிமா – 2015

கடந்த வருடம் வெளியான தமிழ்ப் படங்களின் மொத்த எண்ணிக்கை 200 ஐத் தாண்டியிருந்தது. குப்பைகளின் அதிகரிப்பு பெருமைக்குரிய ஒன்றல்ல. என்னுடைய அபாக்கியம், ஷங்கரும், விக்ரமும் இணைந்த 'ஐ' படத்துடன்தான் இந்த வருடத்தை ஆரம்பிக்க வேண்டியிருந்தது. ரசிகர்களைச் சித்திரவதைக்கு உள்ளாக்குவதில் இருவருமே அளப்பரிய சுகம் காண்பவர்கள். ஒருவர், உடலை வருத்தி, மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பவர்; மற்றவர் மலைக்கே நிறம்பூசிப் படம் எடுப்பவர். ஷங்கரின் வழக்கமான பெரும் படையல் பாணி அவருக்கும், அவருடைய ரசிகர்களுக்கும் இன்னமும் திகட்டாமலிருப்பது ஆச்சரியமளிக்கிறது.

கடந்த ஆண்டு வெளியான இரண்டு படங்களில், அஜீத்குமார் இடம் பெற்றிருந்தார். சோல்ட் அன்ட் பெப்பர் சிகை – கோட் – சூட் – கூலிங்கிளாஸைத் தவிர்த்து அவரைப் பார்ப்பது அசாத்தியம். விளம்பரப் படங்களுக்குப் பொருந்திப் போகக்கூடிய ஒருவர். முழுநீளப் பட நாயகனாகவும், தமிழ்த் திரையுலகின் 'தல' யாகவும் இருப்பது நாம் செய்த தவப்பயன்! 'வேதாளம்' என்றால் 'ஈயென்று' எல்லாப் பற்களையும் காட்டிக்கொண்டு சிரிக்கும்போது பயம்வரவில்லை; மாறாக பற்பசை விளம்பரம் பார்த்த உணர்வு வருகிறது. அஜீத் இடம்பெற்ற இன்னொரு திரைப்படம் 'என்னை அறிந்தால்'. கௌதம் வாசுதேவன் என்பவர் தமிழ் சினிமாவின் பொலிஸ் என்கௌண்டர் ஸ்பெஷலிஸ்ட். 'என்னை அறிந்தால்' என்ற அவருடைய இந்தப் படம், அவர் ஏற்கெனவே இயக்கிய 'காக்க ..காக்க', 'வேட்டையாடு விளையாடு' போன்ற பொலிஸ் என்கௌண்டர்களை நியாயப்படுத்தும் படங்களின், இன்னொரு தொடர்ச்சி அல்லது மங்கிப் போன பிரதியெடுப்பு.

மணிரத்தினம் நீண்டகாலத்துக்குப் பின்னர் தனக்குச் சாதகமான ஆடுகளத்தில் வெற்றிபெற்ற படம், 'ஓ! காதல் கண்மணி'. ராவணன், கடல் போன்ற அபத்தங்களுக்குப் பின்னர், இந்தப் படத்தில் அவருடைய புத்துயிர்ப்பைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால் இந்தப்படத்திலும், பழைய 'அலை' மறுபடியும் 'பாயுதே' என்று எண்ணத் தோன்றியது. இந்த இயக்குநர்கள் எல்லோருமே ஏன் ஒரு பொறிக்குள் சிக்கிக் கொண்டு வெளியே வரமுடியாமல் திணறுகிறார்கள் என்று புரியவில்லை.

**உமா வரதராஜன்**

'இளைய தளபதி' விஜய்யின் 'புலி'க்கும், 'பழைய விதூஷகர்' வடிவேலுவின் 'எலி'க்கும் அவ்வளவு வித்தியாசமில்லை; ரசிகர்களைக் கடித்துக் குதறிவிட்டன. அநேகன் சற்று முயற்சியெடுத்திருந்தால், நேர்த்தியான வணிக சினிமாவாக வந்திருக்கக் கூடிய ஒன்று. மூன்று கூறுகளினதும் ஜென்மாந்தரத் தொடர்புகள் சரிவர இணைக்கப்படாதது, திரைப்படத்தைப் பலவீனப்படுத்திவிட்டது. படத்தின் இன்னொரு பலவீனம், கார்த்திக் வில்லன் பாத்திரத்துக்குத் தெரிவு செய்யப்பட்டமை. அந்த முன்னாள் நாயகனை பாம்பென்றும் சித்திரிக்காமல் பழுதை என்றும் காட்டாமல் இயக்குநர் தடுமாறிக்கொண்டிருந்தார். இந்தப் படத்தில் பேசப்பட்ட முக்கியமான விஷயமொன்று பலருடைய கவனங்களிலுமிருந்து தவறிவிட்டது. அது, சென்னை ஐ.டி. உலகத்தின் இருட்டு மூலைகள். தமிழ் சினிமாவின் கதாநாயக நடிகர் ஒருவர் வில்லனாக மாறிய இன்னொரு படம் 'தனி ஒருவன்'. இந்தப் படத்துக்கு ஏன் பத்திரிகைகள் அவ்வளவு முக்கியத்துவம் அளித்தன என்று, புரியவே இல்லை. இந்தப் படத்தின் வணிக வெற்றிக்குப் பின்னர், அரவிந்தசாமி தன்னை ஒப்பந்தம் செய்யவந்த இயக்குநர்களிடம் விதித்த நிபந்தனை இது: "வில்லனாக தொடர்ந்து நடிக்கத் தயார். ஆனால், வில்லனுக்கு முக்கியமளிக்கும் படங்களாக இருக்க வேண்டும். ஒரே வேளையில் கதாநாயகர்களுக்கும், அரவிந்தசாமி போன்ற 'அழகிய கனவான் தனம்' பொருந்திய வில்லன்களுக்கும் சட்டைகளைத் தயாரிக்கும் பாரிய பணியை, நம் இயக்குநர்கள் இனி, நிறைவேற்றி ஆக வேண்டும்.

சென்ற ஆண்டில் வெளிவந்த படங்களுள் பெருவெற்றியை ஈட்டிய படம் பாகுபலி. பெரும் செலவில் பிரமாண்டமாக எடுக்கப்பட்ட இந்தப் படத்தைப் பழம்பெரும் நடிகை ஜமுனா, 'ஸ்டுபிட் பிலிம்' என்று இரண்டே வார்த்தைகளில் காலி செய்தார். என்னைக் கேட்டால், அவர் நடித்த 'தங்கமலை ரகசியத்'தையும் (1957) 'ஸ்டுபிட் பிலிம்' என்றுதான் சொல்லுவேன்.

கடந்த ஆண்டு தமிழ்த் திரையுலகில் பேய்களின் கொட்டத்துக்கும் அளவில்லை. டிமொண்டி கொலனி, டார்லிங், மாஸ், மாயா, காஞ்சனா – 2.... என்றெல்லாம் படங்கள் வெளியாகின. நயன்தாராவினதும் இயக்குநரினதும் புண்ணியத்தில், 'மாயா' மாத்திரமே சினிமாவாகத் தேறுகின்றது. மற்றப் படங்களை இயக்கியவர்களுக்கு, வேப்பங்கொத்தால் விளாசி – திருநீறடிப்பது அவசியம்.













இந்த ஆண்டில் வெளியான முக்கிய முயற்சிகளாக, என் பார்வையில் **காக்கா முட்டை, இன்று – நேற்று – நாளை, மாயா, குற்றம் கடிதல், கிருமி, தூங்காவனம், பாபநாசம்** ஆகியவற்றைச் சொல்லத் தோன்றுகின்றது.

இருநூறுக்கு ஏழே ஏழு தேறுவது, மகிழ்ச்சிக்குரிய ஒரு விஷயமாகத் தெரியவில்லை. (24.02.2016) ⊘

'தெரிதல்' இலக்கிய வட்டத்துக்காக, 56, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள 'குரு பிறிண்டேர்ஸ்' அச்சகத்தில் அச்சிடப்பட்டு, **தி. செல்வமனோகரனால்** வெளியிடப்பட்டது. ஆசிரியர் : **அ. யேசுராசா**, இலக். 1, ஓடைக்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.